# அறத்தமிழ் ஞானம்

உண்மையே கடவுள்

அறம் 1 க  சிந்தனை 11 கக

''ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.'

—ஔவையார்

சாதி, சமய, இன வேற்றுமையற்ற
மாதாந்த ஆத்ம சிந்தனை
சஞ்சிகை

**2 - 11 - 1992**

நிறுவனரின் சிந்தனைத் தொகுப்புகளும்
பிற ஆக்கங்களும்
விநாயகர் தருமநிதிய வெளியீடு

★ சிக்கனம் - சமத்துவம் - உடலுழைப்பு ★

*சிவமயம்*

# சமர்ப்பணம்





இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று தி. நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை. தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக் கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்மதிருப்தி அடைகிறோம்

விநாயகர் தரும நிதியம் 2-11-92 — நிறுவனர்



## நூல் வெளியீட்டு விபரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அறத்தமிழ் ஞானம் | | | | |
| | சித்திரை | 2100 | பிரதிகள் | 22900= |
| | வைகாசி | 2100 | ,, | 31500= |
| | ஆனி | 2100 | ,, | 35500= |
| | ஆடி | 2100 | ,, | 26500= |
| | ஆவணி | 2300 | ,, | 52200= |
| | புரட்டாதி | 2100 | ,, | 34500= |
| சிறுவர் சஞ்சிகை | | | | |
| | ஆடி | 3000 | ,, | 37000= |
| | ஐப்பசி | 3000 | ,, | 49000= |
| சாரணர் நூல் | | 1000 | ,, | 16000= |
| நூல்கள் மறுபதிப்பு | | 3×1200 | ,, | 63200= |
| சில்லறை செலவுகள் | | | | 1720= |
| | | 23400 | பிரதிகள் | = 370020= |

(ஒப்பம்) வ. ச. செல்வராசா
பொருளாளர்/செயலாளர்

க. தங்கராசா
நிர்வாகப் பொறுப்பதிகாரி

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

| | |
|---|---|
| 1989ம் ஆண்டுக் கணக்கில் | 62000= |
| 01-04-91 — 31-03-91 கணக்கில் | 382999= |
| 01-04-91 முதல் 31-03-92 வரை | 1086436= |

## 1-4-92 முதல் 30-9-92 வரை

**விநாயகர் தரும நிதிய இலவசசேவையான ஊன முற்றோர், அரிசி விநியோகம், நன்கொடைகள் வெளியீடுகள் பற்றிய கணக்கு விபரம்:**

| | |
|---|---|
| ஊனமுற்றோர் இடம்பெயர்ந்தோர் 01-04-92 முதல் 30-09-92 வரை மாதாந்த உதவி | 53293= |
| முதியோர்களுக்கான அரிசி விநியோகம் 01-04-92 முதல் 30-09-92 வரை | 12393= |
| தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூலம் இடம்பெயர்ந்தோர். ஊனமுற்றோருக்கு அரிசி விநியோகம் 19-16-92ல் | 66000= |
| நன்கொடை, வாசிகசாலைப் பத்திரிகைகள், மகளிர் மன்றங்கள், விளையாட்டுப் போட்டிப் பரிசில்கள் 01-04-92 முதல் 30-09-92 வரை | 68531= |
| சித்த மருத்துவத்துறை கைதடி | 10000= |
| வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை | 7000= |
| மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி, பருத்தித்துறை | 4000= |
| பரமானந்த ஆச்சிரமம் 12-04-92 முதல் 30-04-92வரை | 13720= |
| அறநெறித் தேர்வும் பரிசுகளும் மறுவும் 10-07-92 முதல் 30-09-92 வரை | 28502= |
| நூல் வெளியீடு அறத்தமிழ் ஞானம் 12800 | |
| சிறுவர் சஞ்சிகை 6000 | |
| சாரணர் நூல் 1000 மறுமதிப்பு 3600 | |
| ஆக மொத்தம் 23400 பிரதிகள் | 370020= |
| | 632459= |

ஒப்பம்: **ஆ. சி. முருகுப்பிள்ளை**
தலைவர்



# பிரபஞ்ச தத்துவத்தையிட்டு எழுத முற்பட்ட காரணங்கள்

ஔவையார், வள்ளுவர், மணிவாசகர், பாரதியார் போன்றோர் அவ்வக் காலத்தில் எழுதிய நூல்களாலேதான் அறம் வளர்கின்றது. அவர்கள் அவ்வாறு எழுதியிராவிட்டால் அறம் என்ன என்பதை அறியமுடியாது. அவர்களுக்கமைந்த ஐந்து பூத அணுக்கூறுக்கேற்பவே அவர்கள் அறநெறியை ஆராய்ந்து கூறியுள்ளார்கள். சில பல நூறு ஆண்டுகளுக்கு இடையிடையேதான் அவ்வாறு ஐந்துபூத சேர்க்கையுள்ளவர்கள் தோன்றுகிறார்கள். அவர்களும் தங்கள் தங்களுக்கமைந்த பூத சேர்க்கை வித்தியாசம் காரணமாக, வெவ்வேறு விதமாக அறம் பற்றிக் கூறியுள்ளார்கள். உதாரணமாக ஔவையார் ஒரு வரிக் குறளில் கூறியதை வள்ளுவர் இருவரிக் குறளிலும் மணிவாசகர் நாலுவரி வாசகமாயும் கூறியுள்ளார்கள். இவர்கள் எல்லாம் மனிதன் மேல்நிலையடைந்து பிறப்பறுக்கும் வழிவகைகளையே கூறியதைக் காண்கின்றோம். ஒவ்வொருவருக்கும் அமைந்த ஐந்துபூத சேர்க்கைக்கு அமையவே கடமையின் உண்மையை உணர்ந்து இவ்வாறு கூறியுள்ளார்கள், சிலபல சுவாமிகள் தமது உடலைச் சுருக்கி நிஷ்டையிலமர்ந்து இறைபதம் அடைந்துள்ளார்கள். அவர்கள் நாயன்மார்களைப்போல் மறு சீவராசிகளுக்கான உதவிகளைத் தமது உடலுழைப்பால் செய்து கொடுக்கவில்லை நாயன்மார்கள் தமது உடல் துன்பம் பாராது, இறைவன் எல்லா உயிர்களிலும் நிறைந்துள்ளான் என்ற உண்மையை உணர்ந்து சகல உயிர்களுக்கும் தம்மால் முடிந்தளவு சேவை செய்துள்ளதை அறிந்துகொண்டோம், இவர்களின் வித்தியாசமான போக்குகள் அவர்களுக்கமைந்த ஐந்துபூத சேர்க்கை மாறுபாட்டுக் கமையவே அமைந்ததையும் அறிந்துகொண்டோம். தம்தம் உணவுக்காக மறு பிராணிகளை உணவாக்கும் உயிரினங்களையும் காணுகிறோம்: தத்தமது சுகபோக வாழ்க்கைக்கும் அதிகார ஆசைக்கும் இடையூறாயுள்ள மனிதர்களை அழித்தொழிக்கும் மனித வர்க்கத்தையும் கண்டுவருகிறோம்.

பகுத்தறிவில்லாத உயிரினங்கள் தமது இனத்தை விருத்தி செய்வதற்காக குஞ்சு குட்டிகளை அவை இரை தேடும் பருவம்வரையில் இரை தேடிக்கொண்டுவந்து அவ்இரையை ஊட்டி கூட்டில்

வளர்த்து பாதுகாக்கின்றன. அப் பருவம் நீங்கியதும் அவைகளை விட்டு கவலை கொள்வதும் இல்லை; உதவி செய்வதுமில்லை: சேமித்து வைப்பதுமில்லை; ஒன்றையொன்று கொல்வதுமில்லை தங்கள் தங்கள் உணவுகளை அவ்வப்போது தேடி உண்டு காலங்கழிக்கின்றன. ஆனால் பகுத்தறிவுள்ள மனித இனம் பிள்ளை குட்டிகளுக்கு கூடுதலான சொத்துக்களைத் தேடிவைக்க எண்ணுவதால் ஒருவரையொருவர் கொல்வதையும், வெட்டுவதையும், வசைபாடுவதையும் தினசரி கண்டுவருகிறோம். இதனால் மூவாசை மிக்க மனித இனத்தை விட பகுத்தறிவில்லா உயிரினங்கள் மேலானவையா என ஐயுறவு கொள்ளவேண்டியுள்ளது.

நாம் இப் பூமியில் பிறக்கும் பொழுது அரைச்சதம் தானும் கொண்டுவரவில்லை. முன் வினைப் பயனின் ஐந்துபூதச் சேர்க்கையால் அமைந்த பூத அணுக்களை மட்டுமே கொண்டுவந்தோம். இவை எமது தலைமையகத்தில், சூக்கும தேகத்தில் நின்று எம்மை வழிநடத்தி உரிய இடத்தில் சேர்ப்பித்துள்ளது. நாம் கொண்டுவந்த பூத அணுக்களே எமது செயற்பாட்டுக்கு காரணமாகிறது. அப் பூத அணுக்களில் எமது சிந்தனை, எண்ணம், செயல் மூலம் கூடிக் குறைந்த பூத அணுக்களை மட்டுமே கொண்டுசெல்லப் போகிறோம். கொண்டுபோகும் பூத அணுக்கூறுக்கமையவே நாம் செல்லுமிடம் அமையப் போகிறது. அப் பூத அணுக்களில் ஞானஒளி அணுவைக் கூட்டவேண்டுமென எமது மற்றைய ஆகாயப் பூத அணுக்கள் கட்டளை இட்டுள்ளன. இதன் பயனாக நாம் சிறுவயதில் பயின்ற அறநெறிக் கேற்ப எமது கடமையை செய்தேயாக வேண்டும் என்ற நோக்கில் அற நெறிக் கருத்துக்களை பரப்புவதற்குரிய வழிகளை ஆராய்ந்து வெளியிடுகிறோம். இவை ஐந்து பூத கூறு வித்தியாசமாய் அமைந்து கொண்டவர்களுக்கு ஒப்புக் கொள்ள முடியாததாய் தோன்றலாம். வள்ளுவர் கூறிய ஒரு சிலவற்றைத் தானும் ஏற்க முடியாதவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதற்காக திருக்குறளை தூக்கி எறிய முடியாது. திருக்குறள் இன்று உலகின் பல தேசங்களிலும் பல மொழிகளில் மொழிபெயர்த்து அவ் அறக் கருத்துக்களை தத்தமது மக்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந் நாட்டவர்கள் வேறு தேச அகதிகளுக்கு முதலுதவி செய்கிறார்கள். உணவு கொடுத்து காப்பாற்றுகிறார்கள். இருக்க இடம் கொடுக்கிறார்கள். இது அறநெறியாகும்.



இவ்வாறு உணர்ந்த நாம் எமது கடமையை உணரவேண்டியது முதற் பணியாகும். கடமையை உணரும் போது எமது இப் பிறப்பின் ஆரம்பத்திலிருந்தாகுதல் சிறிது உணரவேண்டும். முற்பிறப்பைப்பற்றி நாம் அறிய முடியாது. நாம் எவ்வாறு உருவானோம். எமது பிதாவின் ஐந்துபூத சேர்க்கையுள்ள ஒரு அணுவளவான விந்திலிருந்து எமது மாதாவின் கருப்பையில் உருவாகி வெளிவந்துள்ளோம். வெளிவந்ததும் ஐந்துபூத அணுக் கூறுகள் அமைந்த தன்மைக்கேற்ப உடல் செயல்பெறத் தொடங்கியது. அன்றிலிருந்து நாம் தொழில் செய்து உணவைத் தேடும்வரை பட்ட கடனை ஆராய வேண்டும். நாம் குடிக்கும் நீர், சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு இவைகளை உருவாக்கித் தருவதற்கு எவ்வளவு பேர் வியர்வை சிந்தியிருக்கிறார்கள் எவ்வளவு உயிர்கள் தங்களைப் பலிகொடுத்துள்ளன என்பதை ஆராயும்போது எமக்கு அடைக்கமுடியாத கடன்கள் பலவுண்டு என்ற உண்மையை உணருகிறோம். இவ்வுண்மைகள் ஐந்துபூத அணுச் சேர்க்கை பலவிதமாயமைந்த எல்லாராலும் உணர முடிவதில்லை, உண்மையை உணரக்கூடிய ஐந்துபூத அணுச்சேர்க்கை அமைந்த ஒரு சிலரால்தான் இவைகளை உணரமுடிகிறது,

இறையருள், மனிதப் பிரயத்தனம், சூழ்நிலை ஆகிய இவற்றிலே தான் ஒரு மனிதனின் நிலைப்பாடு முழுவதும் அமைந்துள்ளதை உணரமுடிகிறது. முதலாவதாக முற்பிறப்பு வினைப்பயனாயமைந்த ஐந்துபூத அணுக்கூறுடைய மனிதஉடல், இரண்டாவதாக அந்தஉடல் மூலம் செய்யும் தொழிலால் ஏற்படும் ஐந்துபூத அணுக்கூறின் மாறுபாடுகள். மூன்றாவதாக அவரது சமூக சூழ்நிலைகளிலுள்ள அறிவு, பழக்க வழக்கங்களால் ஏற்படும் ஐந்துபூத விகிதாசார மாற்றங்கள் என்பனவாகும். இவைகளில் ஒருமனிதன் தேவனாவதற்குரிய பூதஅணுக்கள் அமைவதும், அசுரனாவதற்குரிய பூத அணுக்கள் அமைவதும், கூடுதலாக சமூக சூழ்நிலைகளிலே தங்கியுள்ளன. ஞான அறிவு மிக்க மனிதருள்ள சூழ்நிலையில் வாழ்பவர்களின் பூத அணுக்கூறுகள் ஞானமார்க்கத்துக்கு வரக்கூடியதாக மாறி அமைகின்றன. அசுர குணம் மிக்க மனிதருள்ள சூழ்நிலையில் வாழ்பவர்களின் பூத அணுக்கூறுகள் அசுர மார்க்கத்துக்கு மாறி வரக் கூடியதாக மாறி அமைகின்றன. ஆகவே மக்களின் சமூக மேம்பாடு முக்கிய இடத்தை வகிக்கிறது.

மனிதர்கள் சுவாசிக்கும் காற்று சுத்தமாய் அமைந்தால்தான் மனித இருதயம் சரியான முறையில் செயல்பெற்று நல்லெண்ணங்

கள் உருவாகி அதற்குரிய பூத அணுச் சேர்க்கை அமைகிறது. அதனால் நோயுமின்றி வாழவும்முடிகிறது. நாம் வசிக்கும் வீட்டின் பக்கச் சூழலில் குப்பை கூழங்கள், சேற்று நிலங்கள், மலங்கழிக்கும் இடங்கள் அமைந்திருந்தால் அவ்விடத்திலுள்ள காற்று அசுத்தமடைந்து எமது சுவாசத்திற்கு வரும்போது இதய (கதவுகள்) இயக்கம் அழுக்குப் படிந்து ஒழுங்கான முறையில் இயங்குவது தடைப்படுகிறது. அவ்வாறு இயங்கும்போது பூத சேர்க்கை மாறுபட்டு உருவாகும் எண்ணங்கள் கீழ்நிலைக்கு எம்மைக் கொண்டு செல்வனவாய் அமைகின்றன, சரியான முறையில் சுத்தமான காற்று உட்சென்றாலே இயந்திரங்களும் செம்மையாய் வேலை செய்கின்றன. இயந்திர சுற்றாடலில் அசுத்தமான தூசுகள் ஏற்படுமிடத்து இயந்திரத்துக்குள் உட்செல்லும் காற்று அசுத்தங்கள் வால்வுகளின் கதவுகளில் படிந்து இயந்திரம் சரியாய் வேலைசெய்ய முடிவதில்லை. இவ்வாறே மனித இதயமும் வேலை செய்வதை உணர முடிகிறது.

அடுத்ததாக நாம் குடிக்கும் நீர் மிகவும் சுத்தமாய் இருக்கவேண்டும், எமது நல்ல சிந்தனைகள் அமைவதற்கு நீரும் ஒரு காரணமாகிறது, ஒளியும் நல்ல காற்றும் படாத சேற்று நீரில் பலவிதமான கிருமிகள், புழுக்கள் உருவாகுவதைக் காணக்கூடியதாயுள்ளது. அசுத்தமான நீரை நாம் குடிக்கும்போது ஏற்படும் ஐந்துபூத அணுக்கூறு மாறுபாட்டிற்கேற்ப எமது எண்ணங்கள் அமைந்து, அவ் எண்ணங்கள் எம்மை அசுர நிலைக்கு (கீழ் நிலை) கொண்டுசெல்கின்றன, மது அருந்தும் பழக்கத்தினாலும். கசிப்பு வகைகள் குடிக்கும் பழக்கத்தினாலும் நீர்ப் பற்றுக்கள் அசுத்தமடைந்து அதில் உருவாகும் காற்றணுவினால் ஐந்துபூத அணுக்கூறுகள் மாறுபடுவதை உணரமுடிகிறது.

அடுத்தாக நாம் உண்ணும் உணவு வகைகள் நல்ல காற்று அமையக் கூடிய தாவர உணவுகளாக அமைந்தால் அவைகளிலிருந்து உருவாகும் காற்று நல்லதாய் அமைந்து நற்சிந்தனை உருவாகக் கூடிய பூத அணுக்களை உருவாக்குகின்றன. பழுதடைந்த மாமிசங்களையும், பழுதடைந்த உணவு வகைகளையும் உண்பதால் எமது உடலில் அசுத்தமான காற்று உருவாகிறது. அக் காற்று சுவாசத்திற்கு வரும்போது பூத விகிதாசாரம் மாறி எமது எண்ணங்கள் அசுர குணமாக மாறுகின்றன.

இக் காரணங்களினால் எமது சுவாசத்திலுள்ள காற்றின் செயற்பாட்டிற்கேற்பவே "அறம்வளர் இளந்தமிழ்" வெளியீட்டில், அற



நெறியை எமக்களித்து ஒளி உணர்வை விதைப்பவனே" எனக் குறிப்பிட்டுள்ளோம். அவ்வாறான நல்ல காற்று எமக்கு உணர்த்தும் சிந்தனையின் மூலம் இப் பிரபஞ்ச தத்துவத்தையிட்டு எழுத முற்பட்டுள்ளோம். இவ்வாறான காற்றினால் உருவாகும் ஐந்துபூத அணுக்கூறு மாற்றமடைந்த தன்மைக்கேற்ப மக்களுக்கு இதை உணர்த்த முற்பட்டுள்ளோம். இதில் எவரிலும் பிழை கண்டுபிடிக்கும் நோக்கம் சிறிதேனும் கிடையாது. சரியென மற்றவர்கள் உணர்ந்தால் அவர்களும் இவற்றை ஏற்று நடக்கமுடியும். இவை அவரவர்களுக்கு அமைந்த ஐந்துபூத அணுக் கூற்றில் ஒளித்தன்மை சிறிது கூடினாலேதான் சிறுகச் சிறுக உணரமுடியும். அவ்வாறு ஒளிப்பூத அணு கூடுமாறு ஆகாயப்பூத அணுக்கூறுகளை வேண்டுவோமாக.

22-9-92 நிறுவனர்

உ —

# இவர்களும் மனிதர்களே

**சு. ஸ்ரீகுமரன்**

> ஒக்ரோபர் 15ந் திகதி விழிப்புலன் வலுவிழந்தோர் ஞாபகமான வெள்ளைப் பிரம்பு தினமாகும் அதனையொட்டி 'இக்கட்டுரை பிரசுரமாகிறது.

அந்தவீதியால் கையில் வெள்ளைநிறத் தடியொன்றை ஊன்றியவாறு ஒரு இளைஞன் நடந்து வந்து கொண்டிருந்தான். தடியால் தனக்கு முன்னாலுள்ளவற்றையும் நிலத்தையும் தட்டியபடி அவன் மெதுவாக வந்துகொண்டிருப்பதை கண்ட இருவர் "அங்கை பாரடா அந்தக் குருடனை; கரையாலை போய்க் கானுக்கை விழப்போகுது" எனத் தமக்குள் சொல்லியபடி போயினர். சற்று

நேரங் கழிய, அந்த இளைஞன் கால்வாயிற்குள் விழுந்து விட்டான். அவன் கொண்டு வந்த கைத்தடி அப்பால் தள்ளி விழுந்து கிடந்தது.

அவனுக்கு கண் பார்வை இல்லை; ஆதலால் அவன் கைத்தடியைத் தேடுகிறான். எழுந்து நிலையாய் நிற்கவும், நடக்கவும் அவனுக்குத் துணை புரிவது அந்தக் கைத்தடியே. அவன் கையால் தட்டித் தட்டி தேடிப் பார்க்கிறான். வீதியால் செல்லும் பலர் அவனை வேடிக்கை பார்த்தபடி செல்கின்றனர். ஒருவரும் அவனுக்கு உதவ முன்வரவில்லை.

அந்த வழியால் வந்த இளைஞனொருவன் அவனது துன்பத்தை கண்ணுறுகிறான். அவனது தோளில் தொட்டு, தூக்கி விடுகிறான். தூரத்தே விழுந்து கிடந்த கைத்தடியை அவனிடம் கையளிக்கிறான். நன்றியுணர்வோடு அந்த இளைஞனைப் பார்க்கிறான் அந்த விழிப்புலன் வலுவிழந்தவன்!

கண்பார்வை இழப்பு என்பது ஒருவருக்கு பிறப்பு முதல் இறப்பு வரை எப்போதுமே ஏற்படலாம். பிறப்பிலேயே கண்பார்வையின்றி பிறவிக் குருடராக வாழ்வோரும் உண்டு. இடையிட்டு, எதிர்பாராத சம்பவங்களால் கண்பார்வை இழப்பு ஏற்படுவதும் உண்டு.

எவ்வாறாயினும் அவர்களும் எமது சமூகத்தின் ஒரு அங்கம்தானே! கண்பார்வை இல்லையென்றால் அவர்கள் இந்த உலகில் வாழக்கூடாதா? மற்றவர்கள் வாழ்வதை, அனுபவிப்பதை அவர்களும் அனுபவிக்கக்கூடாதா?

அவர்களும் எம்மைப் போன்றவர்களே! அவர்களுக்கும் ஆசைகள், உணர்ச்சிகள், எதிர்பார்ப்புகள் எல்லாமே உண்டு, சமூக மட்டத்தில் அவர்களும் தலை நிமிர்ந்து



சகல மனித உரிமைகளையும் அனுபவிக்கக்கூடிய சுதந்திரம் உண்டு.

உண்மையில் நாம் இத்தகைய விழிப்புலன் வலுவிழந்தவர்களது வாழ்வை உற்று நோக்குவோமானால், அவர்கள் பலவித துன்பங்களை அனுபவிக்கிறார்கள். அகக்கண்களால்த்தான் இந்த உலகத்தையும், மனிதர்களையும், சமூக நடத்தைகளையும் அவதானிக்கிறார்கள். சிவப்பு றோஜா என்பதும், வெள்ளை உள்ளம் என்பதும், அவர்களது அகமனதுள் வேறேதோ பிம்பமாய்த்தான் தெரியும்.

இருப்பினும், அவர்கள் மிகுந்த திறமையுடையவர்களாக விளங்குகிறார்கள். குரல்களிலிருந்தும், ஓசைகளில் இருந்தும் அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள்; பேதப்படுத்துகிறார்கள். அதேபோல, அவர்கள் எழுதிப் படிக்கிறார்கள். பரீட்சைகள் பலவற்றிலும் தேறுகிறார்கள். அவர்களால் அச்சு எழுத்துக்களை வாசிக்க முடியாது; அதற்கென அவர்கள் பிரெய்ல்ஸ் எழுத்துக்களையே பயன்படுத்துகிறார்கள்.

கைத்தடிதான் அவர்களை வழி நடத்தும் துணை. அதை வெள்ளைப் பிரம்பு என்று அழைப்பர். இந்த வெள்ளைப் பிரம்புதான் கண்பார்வையற்றவர்கள் சுயமாக வீதியில் நடமாட வழி செய்கிறது. இது எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய வகையில், நான்கு துண்டுகளாக மடிக்கக் கூடியதாக அமைந்திருக்கும். இந்த வெள்ளைப் பிரம்பே பார்வையற்றவர்களின் சின்னமாக சட்ட ரீதியாக சர்வதேசமெங்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வெள்ளைப் பிரம்பை உருவாக்கியவர் ஜீன் டிலேக் என்பவராவர். பொப் பாடகராகத் தனது வாழ்க்

கையை ஆரம்பித்தடிலேக், இன்று வெள்ளைப் பிரம்பைக் கண்டு பிடித்ததின் மூலம், அரிய பணியை புரிந்துள்ளார். இவர் அண்மையில்தான் இறந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த வெள்ளைப் பிரம்பை, 1930ம் ஆண்டில் அமெரிக்க இலிநோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்ற இடத்திலுள்ள லயன்ஸ் கழகம்தான் பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக அங்கீகரித்தது.

உலகமெங்கும் ஆண்டுதோறும், விழிப்புலன்வலுவிழந்தவர்களின் ஞாபகமாக, வெள்ளைப் பிரம்பு தினம் ஒக்ரோபர் மாதம் 15ந் திகதி கொண்டாடப் படுகிறது.

விழிப்புலன் வலுவிழந்தவர்களின் வாழ்வு வளம்பெற வேண்டும்; அவர்களும் ஏனைய மனிதர்கள் அனுபவிக்கும் அத்தனை சுகங்களையும் அனுபவிக்கவேண்டும்; இந்த உலகில் ஏனையவர்கள் போல அவர்களும் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். அதற்காக ஏனையவர்களும் அவர்களுக்கு உதவ வேண்டும். இதனடிப்படையில் இத்தினத்தில் கண்பார்வை அற்றவர்களுக்கு எம்மாலான உதவிகளை வழங்கி, அவர்களது வாழ்வை வளம்படுத்த வேண்டிய தேவை உலகமாந்தர் எல்லோர்க்கும் உண்டு.

---

இரவு நேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்களைக் காண்கிறோம். பகலில் அவை தெரிவதில்லை, அதனால் வானில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? அஞ்ஞானத்தினால் உன்னால் இறைவனைக் காணமுடியவில்லை என்றால் இதற்காக இறைவனை இல்லை என்று சொல்ல முடியுமா?

---

ஸ—

# கடலலை போல் எழும் கதிரலைகள்

பரம் பொருள் எங்கும் பரந்து எதிலும் இருக்கிறது. சாதாரண மனிதனால் கண்டுகொள்ள இயலாது. இதற்கும் ஒரு பக்குவம் வேண்டும். சமயம் கூறுகிறது:—

பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கிறதா? இதன் ஆரம்பம் எப்போது நடந்தது? இதற்கு ஓரம். விளிம்பு கிடையாதா? அப்படியானால் அதற்கப்பால் என்ன இருக்கிறது. மனித அறிவுக்கு எட்டாத அளவுக்கு பிரபஞ்சம் பரந்து விரிந்து கிடக்கிறதா?

இப்படியான இன்னும் பலப்பல வினாக்களுக்கு விடைகாண வியலும் விஞ்ஞானிகள் ஆய்வு, ஆராய்ச்சியென்று தொடர்ந்து நடத்துகிறார்கள். பல விஞ்ஞான தத்துவ விளக்கங்கள் வந்து கொண்டிருக்கின்றன. சமய ரீதியிலும் பல தத்துவ விளக்கங்கள் கூறப்படுகின்றன. மனித அறிவுக்கு எட்டிய அளவில் தான் பிரபஞ்ச ஞானம் தெரிகிறது. எட்டிய கிரகத்தை விட கிட்டிய, கிரகத்தை ஆராய்கிறார்கள். வருங்காலம் எட்டிய கிரகத்தையும் அளக்கலாம்.

ஆரம்ப பிரபஞ்ச விளக்கம் – ஒரு ''பெரும் வெடிப்பு'' காரணமாக தோன்றிற்று என்பதை சென்ற சகாப்தத்தில் - சமீபத்தில் விஞ்ஞான குழுவொன்று ''ஊதல்'' என்னும் பின் குறிப்பு விளக்கத்தைக் கொடுக்கிறார்கள்.

ஆரம்ப காலத்தில் ''பெரும் வெடிப்பு'' ஏற்பட்டு பின் விரைவான விரிவடைதல் உண்டாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதன் பின்னுரை போல் ''ஊதல்'' அதாவது 'வீக்கம்' ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. பிரபஞ்சத்தின் பெரும் பகுதி இருள் மயமாக இருக்கிறது. வியாபித்திருக்கும் இப்பெரும் வெற்றிடத்தில் நாம் பார்ப்பது ஒரு சிறு துளி, பிரபஞ்சம் நாம் காண்பதைவிட பெரிதாக இருக்க வேண்டும்.

'' பெரும் வெடிப்பு '' மாதிரியான முறையில் எடுத்துக்கொண்டால் பிரபஞ்சம் மூடி இருக்க வேண்டும் அல்லது ஆதி அந்தமில்லாமல் எங்கும் விரிந்து பரந்து வியாபித்திருக்க வேண்டும். மூடியிருந்தால் விரிவு நின்றுவிடும். திறந்த வெளி பிரபஞ்சமானால் அது ஆரம்ப காலம் தொட்டு விரிவடைந்து செல்லலாம் என அறியக்கிடக்கிறது.

பிரபஞ்சம் திறந்த வெளியா? அல்லது மூடியதா? என்பதை நிர்ணயிக்கும் முக்கிய காரணி அதன் அடர்த்தியே, அதிக அடர்த்தியுடையதானால் பொருட்களின் ஈர்ப்பு சக்தி விரிவை இறுதியில் நிறுத்தும். '' ஊதல் '' மாதிரி பிரபஞ்சத்திற்கு அடர்த்தி உடையதாக இருக்க வேண்டும்.

பிரபஞ்சம் பிரகாசமற்ற அல்லது இருண்ட பொருட்களால் ஆக்கப்பட்டிருக்கலாம் என்றும் இப்போது வானவியல் ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். பெரிய அளவில் பார்க்கும்போது பிரபஞ்சம் ஒரு ஒழுங்கில் உள்ளது. சிறிய அளவில் பார்க்கும்போது நட்சத்திரக் கூட்டங்கள் போல் தோன்றுகிறது.

சில விதிகளின்படி பொருட்கள் சுழலும்போது ஒழுங்கற்றுப் போகின்றன. அப்படியானால் விரிவும், குளிர்வடைதலும் போன்ற செயற்பாட்டைக் காண்பது எப்படி என்று கேள்வி எழுப்பப்படுகிறது. '' பெரும் வெடிப்பு '' முறை இதற்குப் பதில் தருவதாக இல்லை. '' ஊதல் '' முறை தருவது ஆரம்ப வெடிப்புடன் அதிவிரைவான விரிவு ஏற்பட்டு பின்பு இன்னும் அதிகம் விரிவடைந்துவிட்டது.

எங்கும் வியாபித்திருக்கும் வானத்தில் பிரபஞ்சம் ஒரு குமிழியெனக் கருதவேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. பிரபஞ்ச அடர்த்தி பற்றிய வானவியல் விஞ்ஞானிகள் அவதானிப்புக்கள் என்ன? எங்களுடைய வானில் தோன்றும் நட்சத்திர ஒளிக்கூட்டங்களுக்கும் அடர்த்தியிருக்கிறது. இக்கூட்டங்களின் நகர்வில் இருந்து இவைக்கும் பிரகாசமற்ற பொருட்கள் உண்டென்று தெரிகிறது. இதில் தோன்றும் பொருட்கள் பிரபஞ்சம் மூடியுள்ளது என்பதை நிரூபிக்கப் போதாது.

வானவியல் அவதானிப்புகள் '' பெரும் வெடிப்பு '' முறையுடன் ஒத்திருக்கிறது. '' ஊதல் '' முறை விஞ்ஞான தத்துவ விளக்கத்துடனேயே இருக்கிறது. முடிவற்ற - வெப்பமும் முடிவற்ற அடர்த்தியும் வானத்தில் பெரும் வெடிப்பை உண்டாக்கியிருக்கிறது எனவும் விரிந்துகொண்டிருக்கும் வானத்தில் வெப்பம் அடர்த்தி நிலைகள் மாறுகின்றன எனவும் கூறப்படுகின்றது. அடர்த்தி அதிகமான பிரதேசத்திற்கு சடப்பொருட்கள் ஈர்ப்பினால் இழுக்கப்பட்டு நட்சத்திரக் கூட்டங்கள் வளர்கின்றன என அறியப்படுகின்றது.



விஞ்ஞானிகள் வான ஓரத்தில் ஆரம்பகால சுருக்கங்களையும் சிற்றலைகளையும் காணக்கூடியதாக இருப்பதாகச் சமீப காலங்களில் கூறுகிறார்கள். இவை இந்நூற்றாண்டின் சிறந்த கண்டுபிடிப்பெனக் கூறப்படுகிறது.

விஞ்ஞானிகளினால் கண்டு பிடிக்கப்பட்ட சீரான கடல் போன்ற கதிரலைகளின் மூலம் பிரபஞ்சம் '' பெரும் வெடிப்பு '' முறையில் உண்டானது என்பது தெளிவாகிறது. பிரபஞ்சம் தோன்றியதைக் கண்டுபிடிக்க மனித சக்தியினால் முடியுமா.?

— யோகன் —

நன்றி, வீரகேசரி வாரமலர்
28-9-92.

கடவுளை (உண்மை) நினையாதவன் சாவுவருகிறபோது கடவுளை நினைக்கிறான். கண்ணிலே நீர் வருகிறது மனைவி - மக்களைப் பிரிய முடியாமல் அழுகிறான் என நாம் நினைக்கிறோம், உண்மை அதுவல்ல, உண்மையான இறைவனை ஆயுள் உள்ள பொழுது உணரவில்லையே என்றுதான் அப்பொழுது அழுகிறான். பொன்னும் - பொருளும் - போகமும் கைகூடிவிட்டால் அவன் கடவுளை நினைப்பதற்கு நேரம் ஏது. உண்மையான அறநெறியைச் சிந்திக்க நேரம் எங்கே அவனுக்கு.

# குருவணக்கம்

இந்த எழுத்தை பிள்ளையார் சுழி என்றும், குரு வணக்கம் என்றும் கூறுகிறார்கள். இது தமிழ் எண் வடிவத்தில் "௩" மூன்று எண்ணைக் குறிக்கிறது. தமிழ் மொழியில் இவ் எண்ணையே முதற் பொருளாக்கியுள்ளார்கள். ஒன்று இரண்டு எண்கள் முதலில் இருக்க மூன்று எண்ணை தமிழ் மொழியில் உயிர் எனவும், அறிவு எனவும், காற்று எனவும் பலவாறு கூறுவதுடன் நில்லாது தமிழ் மொழியிலுள்ள சகல செயற்பாடுகளையும் மும்மூன்று கூறாக்கி பிரித்துவைத்துள்ளார்கள். சமய வழிபாடுகளிலும் மூன்று எண் குறிப்பிடும் விநாயனுக்கு முதல் வணக்கம் செலுத்திய பின்பே ஒன்று எண் குறிப்பிடும் சிவபிரானுக்கும் இரண்டு எண் குறிப்பிடும் உமாதேவிக்கும் வணக்கம் செலுத்துகிறார்கள். ''தமிழ்'' என்னும் மொழியையே மூன்று எழுத்துக்களால் உருவாக்கியுள்ளார்கள் அதிலும் வல்லினம், மெல்லினம், இடையினமான மூன்று வித எழுத்துக்களால் உருவாக்கியதையும் நோக்கும்போது தமிழ் மொழியும் சைவசமயமும் ஒரே காலத்தில் இறை சக்தி பெற்ற மெஞ்ஞானிகளால் உருவாக்கப் பெற்றவை என்பது நிருபணமாகிறது.

அதிலும் 'ஒன்று' என்ற ஓசையுடன் இணைந்த 'மூன்று' என்ற ஓசையாயும் இரண்டு எண் வடிவமான ௨ போன்ற அமைப்பை சிறிது வேறுபடுத்தி '௩' 3 எண்வடிவத்தை உருவாக்கியதையும் நோக்கும்போது இவ் எண்ணின் முதன்மை விளங்குகிறது. பிரபஞ்சத்தின் மூலப் பொருளான சூரியனிலிருந்து சிதறிய கோள்களை எண்களாக்கி அக் கோளின் சிதோஷணத் தன்மைகளை ஐந்துபூதக் கூறுகளாக்கி இவ் ஐந்து பூதக் கூறுகளின் நடுநாயகனாக உள்ள மூன்று எண்ணுக்குரிய அறிவுப் பொருளை முதன்மையாக்கி உள்ளதன் காரணம் முற்றிலும் சரியானதே. தீப் பொருளான சூரியனிலிருந்து சிதறிய பூமி குளிர்ச்சியடைந்ததும், காற்று உருவானதன் பின்பே உயிரினங்கள் தோன்றலாயின. சிறு புல்லாய் தோன்றிய இவ் உயிரினங்கள் பிறப்பு மாறி மாறி பல லட்சம் வருடங்களின் பின் ஐந்தறிவுக் குரங்கினத்திலிருந்து மனித இனம் தோன்றுவதற்கு முக்கிய பூதக் கூறாயமைந்தது காற்றுப் பூதமேயாகும். இக் காற்றுப் பூதம் நடுநாயகமாய் விளங்குவதால் மனிதன் தேவனாவதும் அசுரனாவதும் இக் காற்றினிலே முழுக்க முழுக்க தங்கியுள்ளது. ஆரம்ப கால மெஞ்ஞான மனிதர்கள் இதன் சிறப்பை உணர்ந்தே சமய வரலாற்றில் இதை முதற் பொருளாய் வகுத்து, இதை உறுதிப்படுத்தும் வகையில் தமிழில் உயிரெழுத்து 12 ஐயும் மெய்யெழுத்து 18 ஐயும் மூன்றின் பெருக்கத்தில் உருவாக்கியுள்ளார்கள், தமிழ் என்னும் சொல்லை மூன்றெழுத்தில் உருவாக்கியது போல் தமிழிலுள்ள ஏராளமான சொற்களையும் மூன்றெழுத்தில் உருவாக்கியுள்ளார்கள், இதை எந்நேரமும் சிந்திக்கும் வகையில் குருவணக்கம் எழுதியே கருத்துக்களை எழுதுகிறார்கள். இவற்றிலிருந்து '௩' எண்ணை விநாயகர் என வைத்து முதல் வணக்கம் செலுத்திய தன்மை சகல சமயத்தாருக்கும் விளங்கலாம் என நம்புகிறோம்.



சைவ சமய வரலாற்றில் எந்தவிதமான நற்காரியங்களுக்கோ எந்தவிதமான அபரகருமங்களுக்கோ சாணத்தில் அறுகம்புல்லைக் குற்றி முதலில் பிள்ளையாருக்கு வணக்கப் செலுத்தியே கருமங்களை ஆரம்பிக்கிறார்கள். இதன் தத்துவத்தை அராயும்போது சிலபல உண்மைகள் தெரிகின்றன. எமது மூக்கின் மூலம் எமது சுவாசத்துக்கு செல்லும் காற்றானது எமது இருதயத்தை இயக்கி வெளிவருகிறது. இக் காற்று சுத்தமாவதற்கு ஒளி முக்கியம். தீபம் காட்டிய காற்று சுத்தமடைந்து எமது சுவாசத்துக்கு வரும்போது எமது எண்ணங்கள் நல்லெண்ணங்களாய் அமைகின்றன. அழுக்கான காற்று சுவாசத்திற்கு செல்லும் போது இருதய கதவுகளில் (வால்வு) அழுக்குப் படிந்து இருதயம் வேலை செய்வதில் சிரமம் ஏற்படுவதால் அசுர எண்ணங்கள் உருவாகின்றன. இவ் எண்ணங்கள் எமது தலைமையகத்தில் (சூக்கும தேகம்) அதற்குரிய அணுக்கூறுகளாய் பதிவாகின்றன. இவ் அணுக்கூறுக்கேற்பவே எமது வினைப் பயன் அமைகிறது. எமது பிறவி மேல்—நிலையடையவேண்டுமானால் சுத்தமான காற்றில் உருவாகும் நல்லெண்ணம் உருவாகவேண்டும். தாவரவர்க்கமான முல்லைக்கு தேர் கொடுத்த பாரியின் எண்ணம், கன்றை நெரித்துக்கொன்ற மகனை தேர்ச்சில்லால் நெரித்துக் கொன்ற மனுநீதி கண்ட சோழனது எண்ணம், உயிர் பிரியும் தறுவாயில் தான் இது காலவரை செய்த தரும பலன்கள் சகலதையும் தாரைவார்த்துக்கொடுத்த கர்ணனின் எண்ணம் ஆகிய இவைகள் எல்லாம் (விநாயகனால்) சுத்தமான காற்றால் வேலைசெய்த இருதயத்திலிருந்து பிறந்து அவர்களது தலைமையகத்தில் பதிவாகியுள்ளது என்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். இவ் உண்மையை சகலரும் உணரும் வண்ணம் செயல்பெறுமாறு விநாயகனை (காற்றை) இருகரம் கூப்பி வேண்டுகிறோம். ★

எ —

# ஐந்து பூத விளக்கங்களும் அவற்றின் செயற்பாடுகளும்

இப் பூமண்டலத்திலுள்ள மனித இனம் 9 எண்ணை உருவாக்கிய காரணங்களை எமது 10ம் வெளியீட்டில் வெளியிட்டிருந்தோம். இம் மண்டலத்திற்குரிய கிரகங்களும் மனிதர்களுக்குரிய ஒன்பது பொருளான சிந்தனைகளை உருவாக்குவதாக கூறியிருந்தோம். இந்த ஒன்பது கிரகங்களும் வெவ்வேறு விதமான சக்திகளைக் கொண்டுள்ளன. அவைகளின் நிலைப்பாடான இடத்திற்கேற்பவே அவற்றின் சூடு, குளிர், பனி, காற்று போன்ற சக்திகள் அமைந்துள்ளதை அறிய முடிகிறது. ஒன்பது கிரக சக்திகளையும் சுருக்கி விளக்குவதற்காக, ஐந்து பூதக் கூறுகளாய் உருவமைத்து இவற்றின் அணுக் கூறுகளே இம் மண்டல இயக்கத்துக்கு காரணமானதென விளக்கி வருகிறார்கள். இவற்றின் அணுக்கூறுகளை வைத்தே இயந்திரசாதனங்களை உருவாக்கி விஞ்ஞான அறிவை வளர்த்து வருகிறார்கள். இவ் விஞ்ஞான அறிவு சிறிதளவும் இல்லாத பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுண்மைகளை மிகமிகத் தெளிவாக விளக்கி ஒவ்வொரு பூத சக்திகளையுடைய கடவுளாக ஒவ்வொரு கடவுள்களையும் அதற்குரிய சரித்திர வரலாறுகளையும் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

ஒவ்வொரு உலகத்திலிருந்து வெவ்வேறு கிரகங்களுக்கு பிரயாணஞ் செய்யும் வானவூர்திகளில் பிரயாணஞ் செய்த வரலாறுகளும் ஒரு பூத அணு பத்தாகி அவ்வாறு ஒவ்வொன்று பத்தாகி நூறு அணு உருவானதும் அவ்விதம் நூறாகிய அணுவும் பத்தாக பத்தாக விரிவடைந்து விரிவடைந்து இறுதியில் கோடிக்கணக்கான அணுவுக்குரிய பாணங்களாய் பகைவர்களை அழித்த வரலாறுகளும் தமிழ் மொழியில் அநேகம் அறிந்துகொண்டோம். ஆனால் இவை போலியானவை என பலரும் கருதியுள்ளார்கள். உண்மையை அறிய எவரும் முயற்சிக்கவில்லை. ஒரு சாரார் பேய், பிசாசு, முனி என பல



விதக் கூறுகளைக் கூறி கடவுளுக்கு மக்களையும், ஆடு, கோழிகளையும் பலியிட்டு தங்கள் அறிவில்லா எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள். இவைகள் முழுவதும் முழுத் தவறு என்பதை இன்று கூடுதலான மக்கள் விளங்கிக் கொண்டார்கள். இன்னும் ஒரு சாரார் எத் தீங்கைச் செய்தவிடத்தும் கடவுளை வேண்டுதல் செய்தால் அத் தீங்குக் குரிய பலன் நீங்கிவிடும் என நினைத்து கருமமாற்றி வருவதையும் தினசரி கண்டு வருகிறோம். இவ் எண்ணம் மிகமிகத் தவறானது என்பதை வருங்காலத்தில் விளங்கிக்கொள்ள முடியும். ஒவ்வொருவர் செய்யும் செயலுக்குரிய பலன் பூத அணுக்கூற்றில் அவரவரைச் சேருவதை எந்த சக்தியாலும் நீக்கமுடியாது. நீதிப் பொருள் தனது நீதியைச் செலுத்தியே தீரும் என்பது முற்றிலும் உண்மையாகும்.

எமது நாட்டின் சிந்தனைத் திறன் மேலைத்தேச மாயைத் திறத்தினால் கெடுக்கப்பெற்றுள்ளது. அந்தக் கற்பனை, மாயை வகைகள் உடைக்கப் பெறுவதே இப் பிராந்திய மக்களின் விமோசனத்திற்கு தகுந்த வழிகளாகும், எமது தமிழ் மொழியில் ஒற்றை எண்கள் எல்லாம் பெரும் மதிப்புக்குரியதாய் வகுத்துள்ளார்கள். ஒன்பது கிரகங்களுக்கும் ஒன்பது எண்களை வகுத்த போது 1, 3, 5, 8, 9 ஆன ஐந்து எண்களையும், தீ, காற்று ஆகாயம் ஆன மூன்று பூதங்களாயும் 2, 4, 6, 7 ஆன நான்கு எண்களையும் நீர், நிலம் ஆன இரு பூதங்களாயும் வகைப்படுத்தி யுள்ளார்கள், ஒற்றை எண்களை ஒளியுள்ள ஆண் கடவுள்களாயும் இரட்டை எண்களை சக்தியுள்ள பெண் கடவுள்களாயும் வகுத்துள்ளதைக் காண முடிகிறது, ஒற்றை எண்களை வலப்பக்கம் எனவும் இரட்டை எண்களை இடப்பக்கம் எனவும் உணர்த்தியுள்ளார்கள்.

ஒன்பது எண்ணின் நடுநாயகமான ஐந்து எண்ணை நியாயப் பொருள் என நிலைப்படுத்தியுள்ளார்கள். ஐந்து எண்ணின் நடுநாயகமான 3 எண்ணை முதல் நிலைப்படுத்தி சகல கருமங்களை மூன்று முறையும், தமிழ் மொழியில் ஏராளமான சொற்களை மூன்றெழுத்திலும் உருவாக்கியுள்ளார்கள். இந்த ஐந்து பூதங்களிலும் நடுநாயகமாய் விளங்குவது 3 எண் குறிப்பிடும் காற்றுப் பூதமாகும். இப் பூதத்தை அதன் தன்மைக் கேற்ப கணபதி என்னும் விநாயகன் என்றும், பிள்ளையார் என்றும், ஐங்கரன் என்றும், ஆனைமுகன் என்றும் பலவாறாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

5 பூதங்களில் 1, 9 எண்களை தீப் பூதமாக ஏன் ஆக்கினார்கள் என்பதைச் சிந்திக்கும்போது பல உண்மைகள் தெரிகின்றன: 'ஒன்று' முதல் எண், ஒன்பது கடைசி எண், ஓசை வடிவில் இரண்டுக்கும் கூடிய ஒற்றுமை உண்டு. க, கூ எழுத்து வடிவிலும் இரண்டுக்கும் கூடிய ஒற்றுமை காண்கிறோம். உண்மையிலிருந்தே ஞானம் உருவாகிறது. தீயிலிருந்தே ஒளி தோன்றுகின்றது. இவ்விதமான பல ஒற்றுமை காரணமாகவே இப் பூதத்தை தீப் பூதமென குறிப்பிட்டுள்ளார்கள், 2, 6 எண்களை சக்திப் பொருளான பூதமாக குறிப்பிட்டுள்ளார்கள். இரண்டு சக்திப் பொருள் ஆறு ஆசைப் பொருள் இவை இரட்டை எண்களாலானவை.

இப் பூமியிலுள்ள உயிரினங்கள் இயங்குவதற்குரிய சக்திப் பொருள் நீர் என்பதும் ஆசைப் பொருளும் நீர்த்தன்மையுள்ளதால் இப் பூதத்தை நீர்ப் பூதமென குறிப்பிட்டுள்ளார்கள். ௩ 3 எண்ணை அறிவுப் பொருளான காற்றுப் பூதமாக குறிப்பிட்டுள்ளார்கள், காற்றின் மூலமே அறிவு உருவாகின்றது. ௪, ௭ 4, 7 எண்களை கல்வி, தொழில் பொருளான நிலப்பூதமாய் குறிப்பிட்டுள்ளார்கள். கல்வி, தொழில் என்பனவற்றிற்கு இப் பூமியே உறைவிடமாய் அமைந்துள்ளதை: அறியமுடிகிறது. நடு எண் ஆன 5 எண்ணை நியாயப் பொருளாயும் ஆகாய பூதமாயும் குறிப்பிடுகிறார்கள். 8 எண்ணுக்குரிய சனிக்கிரகம் மிகமிகத் தூரத்திலிருப்பதாலும் நீதி என்றோ ஒரு நாள் தனது நீதியை செலுத்தியே தீரும் என்பதாலும் தூரத்திலுள்ள இப் பூதத்தையும் ஆகாயம் என குறித்துள்ளார்கள்.

— நிறுவனர் —

> உண்மையானது எம்மனிதனால் சொல்லப்படுகிறதென்பதை அடிப்படையாகக் கொண்டதல்ல. உண்மை தனக்குத்தானே சான்று ஆகிறது, உடல் வளர்ச்சிக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் சுதந்திரம் முற்றிலும் அவசியமானது.



# ஞாயிற்றுத் தொகுதி

ஓர் உடுவும் (சூரியன்) ஒன்பது கோள்களும் (நமது பூமியைப் போன்ற) அவற்றின் துணைக் கோள்களும் (மதிபோன்ற) இவை தவிர்ந்த ஆயிரக்கணக்கான வால் உடுக்களும், எரி உடுக்களும் சேர்ந்த கூட்டமே நாம் வதியும் ஞாயிற்றுத் தொகுதியாகும். இவற்றுள் ஞாயிறு மட்டுமே தன்னொளி மயமானது. ஞாயிற்றுக் கதிர்களைப் பிரதிபலித்ததினாலேயே கோள்களும் துணைக் கோள்களும் பிரகாசிக்கின்றன. நமது தொகுதியில் ஓர் உடு மட்டுமே உண்டு. இவை போன்ற இலட்சக்கணக்கான உடுக்கள் அகிலத்தில் உண்டு. அகிலத்தின் உடுக்கட் தொகுதிகளில் சூரியனும் ஞாயிற்றுத் தொகுதியும் உள்ள தொகுதி பால்வழி என அழைக்கப்படும். நமது ஞாயிற்றுத் தொகுதியின் உடுவான சூரியனைச் சுற்றி ஏனைய ஒன்பது கோள்களும் ஒரு குறிக்கப்பட்ட அயன வீதியில் சுழல்கின்றன. ஞாயிற்றுத் தொகுதியின் கோள்கள் வருமாறு:-

புதன், சுக்கிரன், புவி, செவ்வாய், வியாழன், சனி, யூரனசு, நெப்டியூன், புளூட்டோ. ஞாயிறுக்கும் அதற்கு அதி தூரத்திலிருக்கும் புளூட்டோவுக்குமிடையே உள்ள தூரம் 35000 லட்ச மைல்களாகும். இதையே ஞாயிற்றுத் தொகுதியின் ஆரையெனக் குறிப்பிடலாம். நமது ஞாயிற்றுத் தொகுதியைப் போல் அகிலத்திலுள்ள ஏனைய உடுக்களுக்கும் கோள்களையும் துணைக் கோள்களையும் கொண்ட தொகுதிகள் இருக்கலாம்.

ஒளியின் வேகம் ஒரு செக்கனுக்கு 1,86000 மைல்களாகும். ஒளி ஒரு வருடத்தில் செல்லும் தூரம் ஏறக்குறைய $7.5 \times 10^{13}$ மைல்களாகும். இத் தூரம் ஓர் ஒளியாண்டெனப்படும். ஞாயிறுக்கு மிக அருகாமையில் இருக்கும் அடுத்த உடுவிற்கும் ஞாயிறுக்கும் இடையே உள்ள தூரம் 4 ஒளியாண்டுகளாகும். இதனாலேயே ஏனைய உடுக்களின் தொகுதிகளைப் பற்றிய விபரங்களை தற்போதைய வானியல் சாஸ்திர வளர்ச்சியுடன் அறிந்துகொள்ள முடியவில்லை. வானியல் அறிஞர்கள் நமது ஞாயிற்றுத் தொகுதியைப் பற்றிய விபரங்களை

ஓரளவுக்கு அறிந்து வைத்துள்ளனர். இதுவரை நிரூபிக்கப்பட்ட சில முக்கிய விபரங்களை இக் கட்டுரையில் அறிந்துகொள்வோம்.

## 1) புதன்

ஒன்பது கோள்களிலும் மிகச் சிறியதாகிய புதனின் விட்டம் 3100 மைல்களேயாகும். இதுவே கதிரவனுக்கு மிக அருகாமையில் இருக்கும் கோளாகும். புதனின் அயன வீதி பெரிதும் நீட்டப்பட்டிருப்பதனால் சூரியனுக்கும் புதனுக்குமிடையே உள்ள தூரம் இடத்திற்கிடம் வேறுபடுகின்றது.

ஒவ்வொரு கோளும் ஞாயிறைச் சுற்றும் இதேவேளையில், தாமும் தமதச்சில் சுழல்கின்றன என்பதை நாமறிவோம். கோள் தானாகவே சுழல எடுக்கும் காலத்தை வருடமெனவும் அழைப்போம். இந் நாளும் வருடமும் கோளுக்கு கோள் மாற்றமடையும் என்பது தெரிந்ததே. புதன் சூரியனுக்கு மிக அருகாமையிலிருப்பதால் ஞாயிற்றின் ஈர்ப்பு புதனின் சுழற்சியைப் பெரிதும் பாதிக்கின்றது. புதன் தன்னைத்தானே ஒரு முறை சுற்றும்போது கதிரவனையும் ஒரு முறை சுற்றிவிடுகின்றது. ஆகவே எப்போதும் புதனின் ஒரே பாகமே ஞாயிறை நோக்கிக் கொண்டிருக்கின்றது. இதனாலேயே புதனின் நாளும் வருடமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. புதன் ஞாயிற்றுக்கு அருகாமையில் இருப்பதால் அயன வீதி சிறியதாகவே காணப்படுகின்றது. அதைச் சுற்ற எடுக்கும் காலம் (வருடம்) 88 பூமி நாட்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

புதனின் நாளும் வருடமும் ஒன்றாகவேயிருப்பதின் விளைவாக புதனின் ஒரு பகுதி நித்திய இருளிலும், கடுமையான குளிரிலும் ஆழ்ந்திருக்கும். இப் பகுதி நிரந்தரமாக ஞாயிறை நோக்கமாட்டாது. புதன் ஓர் இளம் சிறிய கோளாயிருப்பதால் அதன் ஈர்ப்பு விசை குறைந்தே காணப்படுகிறது. அதனால் இக் கோளிலிருந்து, அருகேயுள்ள ஞாயிறின் கொடூரமான வெப்பத்தால் ஆவியாக்கப்பட்ட வாயுக்களை ஈர்க்கும் வலு புதனுக்கு இருக்கவில்லை. இதன் விளைவாக புதன் கோளில் மிகுதியாயிருக்கும் காபனிரொட்சைட்டுவின் ( $CO_2$ ) சில சுவடுகளைத் தவிர்ந்த வளிமண்டலமே இல்லை எனலாம்.

புதனின் மேற்பரப்பை அவதானித்தால் அது ஓர் மங்கிய வெண்மையாக, சில மஞ்சள் கீறுகளுடன் காணப்படுகின்றது. புவியிலிருந்து 500 லட்ச மைல்களுக்கப்பாலிருக்கும் இக் கோளிற்கு துணைக் கோள்கள் இல்லை.



## 2) சுக்கிரன்

புவிக்கும் புதனுக்குமிடையே கதிரவனைச் சுற்றும் சுக்கிரனை இலகுவாக நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. சூரிய அஸ்தமனத்திற்கு சிறிது பின்பும் சூரியோதயத்திற்கு சிறிது முன்பும் நம் கண்ணுக்குப் புலப்படும் பிரகாசமான 'நட்சத்திரம்' போன்றதே சுக்கிரனாகும். சுக்கிரன் ஏறக்குறைய புவியின் அளவுடையதாகவும் கிட்டத்தட்ட வட்டமான அயன வீதியை உடையதாகவும் காணப்படும். இக் கோளிற்கும் ஞாயிற்றுக்குமிடையே உள்ள தூரம் 10லட்ச மைல்களுக்கு மேல் வேறுபடுவதில்லை. புவியிற்கு மிக அருகில் வரும் கோளாகிய சுக்கிரனுக்கும் புவியுக்குமிடையே உள்ள மிகக் குறைந்த தூரம் 260 லட்ச மைல்களாகும். புவியினதும், சுக்கிரனினதும் அயன வீதிகள் ஒரே தளத்திலில்லாமையால் புவியிற்கும் ஞாயிற்றிற்குமிடையே சுக்கிரன் வருவது மிகவும் அருமையாகும். அடுத்ததாக இம் மூன்றும் 2004ம் ஆண்டு ஒரே நேர் வரிசையில் வருமெனக் கணிக்கப்பட்டுள்ளது

சுக்கிரனது மேற்பரப்பை புவியிலிருந்து நோக்க முடியாமல், சுக்கிரனைச் சுற்றி அடர்த்தியான மேகங்கள் சூழ்ந்துள்ளன. இதனாலேயே சுக்கிரன் தனதச்சில் சுழலும் காலத்தை வரையறுத்துக்கூற முடியவில்லை. வானியல் அறிஞர்கள் சுக்கிரனது நாள் 30 (புவி) மணித்தியாலங்கள் என நம்புகின்றனர். இது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. சுக்கிரனது வளிமண்டலம் முக்கியமாக ( $CO_2$ ) காபனீரொட்சைட்டினால் ஆனதெனலாம் இங்குள்ள மேகங்களின் வெப்பநிலை கதிரவனை நோக்கும் பகுதியில் 55° சென். லிருந்து மறு பகுதியில் உறைநிலை வரைக்கும் வேறுபடுகின்றது. இம் மேகங்கள் புவியின் மேகங்களைப் போல் நீராவியாகவிருக்கலாம்.

இக் கோளின் மேற்பரப்பின் வெப்பநிலை அதிகமாகவேயிருக்க வேண்டுமென நம்பப்படுகின்றது. ஏனெனில் சுக்கிரனது வளிமண்டலமாகிய காபனீரொட்சைட்டு அடுக்குகள் இக் கோளின் வெப்பநிலையை வெளியேறாமல் தடுக்கும் ஒரு பிரமாண்டமான கம்பளி போன்று இயங்குகின்றது. இதனால் சூரிய வெப்பம் வெளியேற வழியின்றி சிக்கிக்கொள்கின்றது. ஆகவே வானியல் அறிஞர்கள் சுக்கிர

னின் மேற்பரப்பு காற்றினால் அரிக்கப்பட்ட, சோபையற்ற வனாந்தரமாகவோ அல்லது கொதிக்கும் சமுத்திரங்களாகவோ இருக்கலாம் என ஊகிக்கின்றனர். எப்படியிருப்பினும் சுக்கிரனின் மேற் பரப்பின் வெப்பநிலை அதிகமாகவே இருக்கும். ஏறக்குறைய நீரின் கொதி நிலைக்கு அருகாமையில் இருக்கலாமெனை நம்புகின்றனர். சுக்கிரனுக்கு துணைக்கோளில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

3) புவி

பல வருடங்களாக நமது புவி அகிலத்திலேயே மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஆனால் ஒரு பரந்த கடற்கரையிலுள்ள ஒரு சிறு மண்ணுக்குள்ள தகுதிதான் நமது புவிக்கும் இவ் அகிலத்திலுண்டு என்பதை நவீன வானியல் சாஸ்திர வளர்ச்சியினால் அறிந்து கொண்டுள்ளோம்.

சூரியனிலிருந்து மூன்றாவது கோளாகிய புவி ஞாயிறிலிருந்து சராசரியாக 930 லட்ச மைல்களுக்கு அப்பால் அயன வீதியில் சுற்றுகின்றது. புவி சரிக்கப்பட்ட தனதச்சில் சுழல ஏறக்குறைய 24மணித்தியாலங்களையும் அயன வீதியில் சூரியனைச் சுற்ற $365\frac{1}{4}$ நாட்களையும் எடுக்கின்றது. புவி கோளவடிவமானதல்ல, இதன் துருவங்களுக்கூடாகச் செல்லும் விட்டம் பூமத்திய ரேகையினூடாகச் செல்லும் விட்டத்திலும் 27 மைல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இதன் வளி மண்டலம் பெரும்பாலும் நைதரசனும் ($N_2$ ஒட்சிசனாலும் ($O_2$) ஆக்கப்பட்டதாகும். இவ் வளிமண்டலத்தினால் சூரிய வெப்பம் பெருமளவிற்குக் குறைக்கப்படுகின்றது புவியில் இதுவரையில் குறிக்கப்பட்ட மிகக் குறைந்த வெப்ப நிலை 120° பார தென்துருவத்திலும், மிகக் கூடிய வெப்ப நிலை 136° பார வட ஆபிரிக்காவிலுள்ள லிபியாவிலுமாகும். புவியின் மேற்பரப்பின் 2/3 பகுதியினை நீர் தனதாக்கிக் கொண்டுள்ளது, புவிக்கு ஓர் துணைக் கோள் உண்டு. மதியென அழைக்கப்படும் இத் துணைக்கோள் புவியைச் சுற்ற 27 நாட்கள் எடுக்கின்றது. மதியிலிருந்து புவியை நோக்கின் கண்டங்கள் பதிக்கப்பெற்று வெள்ளை வெளேரென்ற துருவப் பனி முடிகளையும் பிரகாசிக்கும் சமுத்திரங்களையும் கொண்டிலங்கும் பச்சை கலந்த நீல நிறச் சக்கரமாகப் புவி தோற்றமளிக்கும்.

மானிடப் பிறவிகளின் இருப்பிடமாய் இருப்பதே புவியின் தனிச் சிறப்பாகும். எமது ஞாயிற்றுத் தொகுதியில், புவியில் மட்டுமே நமக்குத் தெரிந்த உயிரினங்கள் வசிக்கக் கூடிய சூழ்நிலை அமைந்துள்ள தென்பது குறிப்பிடத்தக்கதே யெனினும், இது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் சூழ்நிலைக்கேற்றவாறே ஜீவராசிகள் பரிணாமப்படுகின்றன என்பதை நாம் உயிரியல் வாயிலாக அறிகிறோம்.

( தொடரும் )

௭ —

# ஆன்மா இறைவனுடன் ஏன் சங்கமமாகவேண்டும்?

இப் பிரபஞ்சத்தின் 5 பூத செயற்பாடுகளால் உருவானதே ஆன்மா என்று சொல்லப்பெறும் உயிராகும். பத்துப் பூத அணுக்கள் சேர்ந்து உருவாகி ஆரம்பமான ஆன்மா (இயக்கம்) கடமையுணர்வின் மூலம் பூத அணுக்கள் கூடுதலாகச் சேர்ந்ததும் இனமாற்றமடைகிறது. அறுகம் புல்லாய் ஆரம்பித்த பூத அணுக்கூறு 10, 20 கூடியதும் வேறு புல்லினமாக மாற்றமடைகிறது. ஒவ்வொரு பூத அணுவிலும் அப் பூத அணு 50 வீதம், மற்ற 4 பூதங்களும் $12\frac{1}{2}$ வீதமாக 50 வீதமும் அமைந்து ஒரு பூத அணுவாகிறது. உதாரணமாக காற்று அணுவில் காற்று 50 வீதம் தீ $12\frac{1}{2}$, நீர் $12\frac{1}{2}$, நிலம் $12\frac{1}{2}$, ஆகாயம் $12\frac{1}{2}$ ஆக அமைந்திருக்கும். 84 இலட்சம் யோனி பேதமுள்ள உயிரினங்கள் இப் பூமியில் உள்ளன. 10 அணுவுடன் ஆரம்பித்த அறுகம்புல் காலகெதியில் 100 அணு சேர்ந்ததும் ஒரு பெரும் புல்லினமாக மாறுகிறது, இவ்வாறு படிப்படியாக ஆயிரமாயிரம் இலட்சம் பத்து இலட்சம், கோடிக்கணக்கான அணுக்கள் சேர்ந்ததும் பனை போன்ற பெரும் விருட்சமாய் மாறியுள்ளதைக் காண்கின்றோம். இவ்வாறு 2 அறிவு, 3 அறிவு 4 அறிவு, 5 அறிவுள்ள உயிர் இறுதியில் 6 அறிவுள்ள மனித இனம் தோன்றி வளர்ந்துவிடுகிறது.

இவ்வாறு வளர்ந்த ஆன்மா மனித ஆன்மாவாக உருவெடுக்க பல லட்சம் வருடங்கள் சென்றுள்ளது. பகுத்தறிவைப் பெற்ற மனித இனம் பிறப்பை நீக்க முயற்சி செய்வது முக்கியம். இப் பிறவிக்குரிய ஐந்து பூத அணுக்கூறில் ஏதாவது ஒருவித பூத அணுக்கூறை இல்லாமற் செய்தால் மற்றைய பூத அணுக்கள் அவ்வவ்விடத்தை அடைந்துவிடும்போது பிறப்பு இல்லாமற் போகின்றது, ஒரு பூத அணு முற்றாக இல்லாமற் போனால் மறுஅணுக்கள் பிரிந்துவிடுகின்றன.

ஞானிகள், முனிவர்கள் எல்லாம் பிறப்பை நீக்குவதற்கான முயற்சிகள் செய்து முத்தி (இறைவனுடன்) அடைந்ததாக வரலாறு கூறுகிறது. எந்த ஒரு ஆன்மாவும் தனது செயல் மூலமே இறைவனுடன் சங்கமமாகவேண்டும். திரும்பத் திரும்ப முதலாம் வகுப்புப் படித்துக்கொண்டிருப்பது பகுத்தறிவு ஆகாது. 2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம் வகுப்பென அறிவு விரிய மேல் வகுப்புக்கு வந்ததும் திரும்ப

கீழ் வகுப்புக்குப் போகாமல் 9ம் எண்ணுக்கு வந்ததும் ஞான ஒளியில் இரண்டறக் கலக்க முடியும். திரும்பத் திரும்ப மூவாசை காரணமாக கீழ் வகுப்புக்குப் போனால் பிறப்பின் காலம் பல கோடி வருடங்கள் இப் பூமியில் உழன்றேயாகவேண்டும்.

மூவாசையை நீக்குவதென்பது முடியக்கூடிய காரியமல்ல. இவ்வாசை நீங்கும் காலம்வரை பிறந்து பிறந்து உழன்றேயாகவேண்டும். ஆசையை நீக்கினாலே ஒருவகை இருவகை பூத அணுக்கள் இல்லாமற் போய்விடும். அவ்வாறு ஓரிருவகை அணுக்கள் இல்லாமற் போனதும் மற்றவை செயல்பெற முடியாமல் பிறப்பை நீக்கவேண்டியேற்படுகிறது. சில ஞானிகள் தம் உடலை மறந்து யோகத்திலமர்ந்து 5 பூத அணுக்கூற்றில் ஒளியானது கூடி ஆசைக்குரிய நீரணுவை இல்லாமற் செய்ததும் பிறப்பற்ற முத்தி அடைகிறார்கள். வேறு சிலர் கடும் உடலுழைப்பின் மூலம் மூவாசையை நீக்கி உயிரினத்துக்கு தம்மாலான சேவையைச் செய்து அதன் மூலம் அவர்களது 5 பூத அணுக்களில் ஒளியானது கூடியதும் நீரணுவை இல்லாமற் செய்து பிறப்பை நீக்கியுள்ளார்கள். உதாரணமாக திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் தொண்டின் மூலமும், மணிவாசகர் இரக்க சிந்தனை மூலமும், நளாயினி உடலுழைப்பின் மூலமும் பிறப்பை நீக்கி முத்திநிலை அடைந்ததை அறிந்துள்ளோம், ஆகவே எந்த விதமாய் ஆரம்பமான ஆன்மாவும் கடைசியில் இறைவனுடன் சங்கமமாகி பிறப்பை இல்லாமற் செய்வது அவரவர் கடமையாகும்.

* செயலில் காட்டும் தேசப்பற்று என்பது வெறும் மனக் கிளர்ச்சியோ தாய் நாட்டினிடம் கொள்ளும் பாச உணர்ச்சியோ கூட ஆகாது. நம்முடன் வாழும் நாட்டினர்க்கெல்லாம் சேவை செய்யவேண்டும் என்ற ஆவேச உணர்வே தேசப்பற்று.

* ஞான வளர்ச்சி திறமையுடன் தொழில் புரிவதைத் தோற்றுவிக்கிறது.

உ

# அறிவுக்களஞ்சியம்

97 பாகிஸ்தானின் தலைநகரம் எது?
இஸ்லாமபாத்

98 மலேசியாவின் தலைநகரம் எது?
கோலாலம்பூர்

99 பிலிப்பைன்ஸ் தலைநகரம் எது?
மணிலா

100 ஈராக்கின் தலைநகரம் எது?
பாக்தாத்

101 தாய்லாந்தின் தலைநகரம் எது?
பாங்கொக்

102 உலகின் மிகப் பெரிய இரும்புப் பாதை எது?
டிரான்ஸ் சைபீரியன் ரயில் பாதை,

103 உலகின் மிகப்பெரிய நகரம் எது?
டோக்கியோ

104 கிழக்குப் பிரிட்டன் என்பது யாது?
ஜப்பான்

105 ஜப்பானின் முக்கிய எரிமலை யாது?
பியுஜியாமா

106 கொதிநீர் ஊற்று அதிகம் உள்ள இடம் எது?
ஐஸ்லாந்து

107 பூமி என்பது என்ன?
கோள்

108 சாதாரண உப்பின் இரசாயனப் பெயர்?
சோடியம் குளோரைட்

109 சமையல் சோடாவின் இரசாயனப் பெயர்?
சோடியம்-பை-கார்பனைட்

110 ரயரைக் கண்டுபிடித்தவர் யார்?
டன்லப்

111 மின்பல்ப்பு கண்டுபிடித்தவர் யார்?
தோமஸ் அல்வா எடிசன்

112 தேனீக்களின் வாழ்க்கைச் சிறப்பு யாது?
சமுதாய வாழ்க்கையே ஆகும்

113 மஞ்சள் காமாளை போக்கும் மூலிகை எது?
கீழா நெல்லி

114 சர்க்கரை நோயைக் குணப்படுத்தும் மருந்து எது?
இன்சுலின்

115 மிகப் பெரிய கடல் விலங்கு எது?
திமிங்கிலம்

116 நாம் உயிர்வாழத் தேவையானவை யாவை?
தீ, காற்று, நீர், உணவு

117 இராமாயணம், மகாபாரதம் எளிய நடையில் எழுதி புகழ் பெற்ற அரசியல் தலைவர் யார்?
இராஜாஜி

118 உலகிலேயே மிகப் பெரிய தமிழ்செய்யுள் காவியம் எது?
மகாபாரதம்

119 உலகிலேயே மிக அதிக மக்களால் பேசப்படும் மொழி எது?
சீன மொழி

120 உலகிலேயே நீளமாக ஓடும் ஆறு எது?
அமேசன் நதி

121 உலகிலேயே அதிகமாக வாழும் மதத்தினர் யார்?
கிறிஸ்தவர்கள்



122 வெடிமருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
அல்பர்ட் நோபல்

123 உலகிலேயே மிகவும் வேகமாகச் செல்லும் மிருகம் எது?
சிறுத்தை

124 கரன்சி நோட்டை முதன் முதலாக வெளியிட்ட நாடு எது?
சீனா

125 எகிப்து நாட்டில் வெள்ளைத் தங்கம் என எதைக் குறிப்பிடுகிறார்கள்?
பருத்தி

126 ஆற்றல்கள் அனைத்திற்கும் மூலகாரணம் எது?
சூரியன்

127 யானையையும் அஞ்சச் செய்யும் மிருகம் எது?
புலி

128 பனிக்கட்டியின் உருகு நிலை என்ன?
0 ° (பூச்சியம்)

129 புதன் சூரியனைச் சுற்றிவர எத்தனை நாட்கள் பிடிக்கும்?
88 நாட்கள்

130 சூரியனை ஒரு முறை புளுட்டோ சுற்றிவர ஆகும் காலம் எவ்வளவு?
2 4 8 ஆண்டுகள்

131 நீர் இருக்கும் வரை கிடைக்கும் ஆவியின் பெயர் என்ன
ஈர ஆவி

132 நீர் முழுவதும் ஆவியான பிறகும் உள்ள ஆவியின் பெயர் என்ன?
உலர் ஆவி

133 முதன் முதலில் தமிழில் சிறுகதை எழுதியவர் யார்?
வ. வே. சு. ஐயர்

# 9 கிரக சக்திகளாலான 5 பூத செயற்பாடுகள்

இப் பிரபஞ்சத்தை இயக்கி வருகின்ற 9 கிரக சக்திகளையும் 5 பூதக் கூறுகளாய் அமைத்துள்ளார்கள் 1 தீ 2 நீர் 3 காற்று 4 நிலம் 5 ஆகாயம் என வகுத்துள்ளார்கள். இவற்றுள் 3 எழுத்துள்ளதும் 3 எண்ணால் அமைந்ததுமான காற்று நடுநாயகமாய் அமைந்துள்ளதை காணுகின்றோம். இக் காற்றானது கால சூழ்நிலைக் கேற்ப பலவித மாறுபாடடைந்து ஆன்மாக்களை இயக்கிவருகிறது. காற்றின் தன்மைக் கேற்ப பல பெயர்களை சைவசமயத்தில் ஆக்கியுள்ளார்கள். கணங்களின் தலைவன் எனச் செயல்பெறும்போது கணபதி என்று அழைக்கிறார்கள். உள்ளத்தில் தொழில் எண்ணம் உருவாகி செயல் பெறும்போது விநாயகன் என அழைக்கிறார்கள். வலப்பக்கமானதும் இடப்பக்கமானதுமான செயல்பெறும்போது ஐங்கரன் என அழைக்கிறார்கள். வேகமாய் செயல்பெறும்போது ஆனைமுகன் என அழைக்கிறார்கள். இவ்விதமாக செயல்பாட்டுக்கு ஏற்ப பலவித நாமமிட்டுள்ளார்கள். காற்றானது தூசு அழுக்குப் படிந்தால், இயந்திரத்திலுள்ள (வால்வு) காற்றுக் கதவில் இடைவெளி ஏற்பட்டதும் இயந்திரம் செயல்பெற முடியாத தன்மையை அடைகிறது. உயிர்களின் (வால்வு) இதயத்தில் நல்ல காற்று சென்று வேலை செய்யாவிட்டால் அவ்வுயிர்களின் எண்ணத்தில் பல்விதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன, ஆரம்பத்தில் நல்ல காற்றுப் போய் இருதயம் இயங்காதுபோனால் காலாகாலத்தில் காற்றின் தன்மைக் கேற்ப இருதயம் வேலை செய்யும்போது எண்ணக் கருவில் பலவித வித்தியாசங்கள் ஏற்படுகின்றன.

இப் பூத அணுக் கூறுகள் சூக்கும தேகத்தில் அவ்வவ் உயிரினங்களின் எண்ணக் கருவுக் கேற்ப கூடிக் குறைகின்றன,

உடலுழைப்பு காரணமாக காற்று சூடேறியதும் காற்றணு சுத்தமடைகிறது. சுத்தமான காற்றில் இயங்கும் இருதயம் நல்லெண்ணத்தையே உருவாக்குகிறது. நல்லெண்ணம் ஒளிப்பூத அணுவைக் கூட்டுகிறது.



பிள்ளையார் என்னும் நாமம் தகப்பன் பிள்ளையா, தாயின் பிள்ளையா என்ற கேள்விக்குறியை உருவாக்கியுள்ளதை உணர முடிகிறது. இக் காற்று தீப் பூதத்தை எரிய உதவி செய்கிறது. ஒளிப் பூதத்தை நன்றாய் செயல்பட உதவுகிறது. காற்றில்லாது போனால் ஒளி பிரகாசிக்கமாட்டாது. நீரில் கிருமிகளை உருவாக்குவதற்கும் காற்றே உதவுகிறது, கல்விதொழில் முதலியனவான இப் பூமியின் இயக்கத்துக்கும் காற்று முழு உதவி புரிகிறது. நியாய நீதி உணர்வுகளையுடைய ஆகாய பூதம் இயங்கவும் இக் காற்றே மூல காரணமாய் அமைந்துள்ளது.

இவ் 5 பூதங்களும் ஆன்மாவிலுள்ள சூக்கும தேகத்தில் செயல் தன்மைக்கேற்ப அணுக்கூறுகளை சேர்ப்பித்து வருகின்றன. ஒரு மனிதனுடைய 5 பூத சேர்க்கையை ஆராயுமிடத்து சில பல உண்மைகள் வெளிவருகின்றன. ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு பூத அணுவும் நூற்றிருபது இலட்சக்கணக்கில் அமைந்து 5 பூத அணுக்களும் 6 கோடி அணுக்கணக்கில் இருக்கலாம். இப் பூத அணுக்களுக்குரிய ஆன்மா மேல்நிலை இனம் மாறுவதாயிருந்தால் பத்து லட்சம் அணு கூடவேண்டும். ஒரு நாளில் 10 அணு கூடுவதென வைத்துக்கொண்டால் ஒரு வருடத்தில் 3600 அணு கூடலாம். 89 வருடம் சென்றால் 3 இலட்சம் அணுக்கள்தான் கூட முடியும். ஆகவே இன்னும் குறைந்தது 3, 4 பிறப்பாகுதல் எடுக்க வேண்டும். இதற்கிடையில் வேறு பிறப்புக்களில் சூழ்நிலை மாறுபாடு காரணமாக கீழ்நிலைப் பிறப்புக்களுக்குப் போகவேண்டியும் ஏற்படலாம்.

மானுட நிலையிலிருந்து தேவநிலை எய்துவதற்கு ஒரு லட்சம் ஆண்டுகள் எடுத்துக்கொள்ளலாம். தேவ கணங்களில் மேலான நிலையை அடைய ஐந்து லட்சம் வருடங்கள் எடுக்கலாம். பின்பு அவன் பரிபூரண நிலையை அடைய ஐந்து கோடி வருடங்கள் எடுக்கலாம். ஆனால் அவன் தனது பரிபூரணத்தை விரைந்து நிறைவேற்றுவானாகில் கால அளவைக் குறைத்துவிட முடியும், தக்க முயற்சி எடுத்துக்கொண்டால் அதே பரிபூரண நிலையை ஆறு மாதங்களிலோ ஆறு வருடங்களிலோ ஏன் எய்திவிடல் ஆகாது. உலகிலே ஞானிகளும், தீர்க்கதரிசிகளும் பலர் தோன்றியுள்ளனர். அன்னவர் அனை

வரும், மனிதன் பலகோடி வருடம் வாழ்ந்த வாழ்க்கையை ஒரே சீவிதத்தில் வாழ்ந்து நிறைவு பெற்றுள்ளனர். மனதை ஒருமுகப்படுத்துதல் என்பதன் பொருளே காலத்தைக் குறுக்குதலாம். இப்படிச் செய்வதால் மேலோர் காலத்தை வெல்கின்றனர்.

5 பூதங்களின் அணுக்களின்றி எந்த ஒரு பொருளும் இப் பிரபஞ்ச பூமியில் செயல்பெற முடியாது. சடப்பொருளோ திரவப் பொருளோ உயிரினங்களோ எதிலும் 5 பூத அணுசக்தி வித்தியாசமான கணக்கில் அமைந்தேயிருக்கும். இச்சக்தியை இறைவன் தூணிலும் உள்ளான் துரும்பிலும் உள்ளான் என்ற பழமொழியிலிருந்து உணர்ந்துகொள்ளலாம். ஒரு துரும்பிலும் 5 பூத அணுச்செறிவு சேர்ந்தேயுள்ளது.

ஒரு மனிதனின் எண்ணங்கள் பலவிதமாய் அமைவதற்கு பல காரணங்கள் உண்டு. இவற்றில் முக்கியமான மூன்று காரணங்கள்:

ஐந்து பூத அணுச் சேர்க்கையில் (முன்வினைப் பயன்) நாம் கொண்டுவந்த 5 பூத அணுக் கூறுகளின் பலனாக ஏற்படும் எண்ணங்கள்.

மனிதப் பிரயத்தனத்தின் மூலம் அனுபவத்தால் ஏற்படும் எண்ணங்கள்.

சமூக சூழ்நிலை பழக்கவழக்கங்களால் ஏற்படும் எண்ணங்கள்

இவ்வாறான எண்ணங்களின் நன்மை-தீமைகள் சூக்கும தேகத்தில் (தன்மாத்திரை) பூத அணுக்களாகப் பதிந்து எமது பிறப்பை நிர்ணயிக்கின்றன. இதை மாற்ற எந்தச் சக்தியாலும் முடியாது.

**மனைவி, மக்கள், பொன், பொருள் இவைகளுக்காக மக்கள் குடம் குடமாய்க் கண்ணீர் சிந்துகிறார்கள், ஆனால் ஞானம் வேண்டும், அருள் வேண்டும், உண்மை வேண்டும் என அழுவது யார்?**

௮ —

# 1 - 2 - 3 எண் குறிப்பிடும் பூதக் கூறுகளும் இவற்றின் தத்துவங்களும்

ஒன்றும் இரண்டும் தனித் தனிக் கலப்பில்லாத எண்களாகும். 1ம் 2ம் சேர 3 உருவாகிறது. ஆனால் இம் மூன்று எண்ணே முதல் அமைப்பாய் செயல் பெறுவதைக் காண்கிறோம். ஒன்றான தீயும் இரண்டான சக்தியும் சேர மூன்றான காற்று உருவாகிறது. இம் மூன்றும் இப் பூவுலக இயக்கத்துக்கு முக்கிய இடம் வகிக்கின்றது. இக் காற்று உருவாகியதன் பின்பே உயிரினங்கள் தோன்றலாயின. இவ் உயிரினங்களின் தூல தேக வளர்ச்சிக்கு வாதம், பித்தம், கபம் எனப் பெறும் காற்று, சூடு, நீர் இவை மூன்றுமே முக்கிய பங்கு வகிக்கின்றது. இக் காரணங்களால் எமது தமிழ் மொழியும் மூன்று இனமான மூன்றெழுத்தால் உருவாகியுள்ளது. இத் தமிழில் குறிப்பிடும் எல்லா வகைப்படுத்தல்களையும் மூன்று மூன்று விதத்தில் உருவாக்கி உள்ளார்கள். எண் உருவ அமைப்புக்களையும் ஓசை அமைப்புக்களையும் மிகவும் திறம்பெற உருவாக்கியுள்ளதைக் காணுகிறோம்.

ஒன்று எனப் பெறும் உண்மைப் பொருளான சூரியனது தீயும் இரண்டு எனப்பெறும் சக்திப் பொருளான சந்திரனது குளிரும், இரண்டும் சேர்ந்து உருவான மூன்று எனப்பெறும் அறிவுப் பொருளான காற்றும் சேர்ந்து இப் பூவுலகை இயக்கி வருகின்றன. நீருக்கு நிலப்பூதம் முக்கியமான தன்மைபோல தீயுக்கு ஆகாயப் பூதம் முக்கியமாகிறது. காற்றுப் பூதம் இவைக்கு இடையில் பரவியுள்ளது. நீரையும் தீயையும் கண்களால் காணமுடியும். காற்றை கண்களால் காணமுடியாது. இம் மூன்று பூதங்களையும் வைத்தே இப் பூவுலகிலுள்ள உயிரினங்களின் சிந்தனை, சொல், செயல் உருவாகிறது.

எமது சிந்தனையில் உருவாகும் எண்ணங்கள் எமது தலைமையகத்திலுள்ள காற்றணுவுக் கேற்பவும் அவ் எண்ணங்களால் உருவாகும் சொல் (வார்த்தை) எமதுநீரணுவின் அளவுக்கேற்பவும், இவற்றினால் உருவாகும் செயல் அவரிடமுள்ள தீ அணுக்களின் தொகைக் கேற்பவும் உருவாகிறது. சிந்தனை உருவாவதற்குரிய காற்றின் தன்

மைக் கேற்பவே ஒவ்வோர் உயிரினங்களின் எண்ணங்களும் வித்தியாசமாய் அமைகின்றன. இன்று விஞ்ஞானிகள் இம் மூன்று பூதக் கூறுகளின் அணுக்களை வித்தியாசமான கணக்கில் அமைத்து விதம் விதமான இயந்திர சாதனங்களை உருவாக்குகிறார்கள்.

இயந்திரத்தில் போகும் எண்ணெய் அணுக்களின் தொகைக்கேற்ப காற்றணுவும் சென்றாலே இயந்திரம் இயங்குகின்றது இவ் இயந்திரத்தை சூடு ஏறாமல் செய்வதற்கு நீரைப் பாவிக்கின்றார்கள். காற்றைப் பாவித்தும் இயந்திரத்தின் சூடு கூடாமல் செயல்படுத்துகிறார்கள். தீ இல்லாமல் இயந்திரம் சக்தியை உருவாக்க முடியாது. தீ எரிவதற்கு காற்று முக்கியம். மூன்று பூத அணுக்கணக்கு பாவிக்கும் தன்மைக் கேற்ப அவற்றின் சக்தி பலவிதமாய் உருவாவதைக் காணுகிறோம். இவ்விதமாக மூன்று விதமான மின்சாரத்தை உருவாக்கி பெரும் சக்தியுள்ள இயந்திரங்களை இயக்கி ஏராளமான தொழில் வளங்களை உருவாக்குகிறார்கள், தீச் சக்தியிலுள்ள சிவப்பு மின்சாரமும் நீர்ச் சக்தியுள்ள நீல மின்சாரமும் காற்றுச் சக்தியுள்ள மஞ்சள் நிற மின்சாரமும் மூன்று வழியாய் செல்கின்றதைக் கண்டு கொண்டோம். ஒரு வழியில் மின்சாரம் இல்லாதுபோனால் இப் பெரும் இயந்திரங்கள் இயங்கமாட்டாது.

இவ்வாறே பூமண்டலத்திலுள்ள உயிரினங்கள் ஐந்து பூத அணுக்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. உயிரினங்கள் இயங்குவதற்கு (சூக்கும தேகம்) அவற்றின் தலைமையகத்திலுள்ள அணுக் கூறுகளே கட்டளை பிறப்பித்து செயற்படுத்துகின்றன. நாம் ஐந்து வயதுப் பிராயத்தில் குருவிடம் கற்பவைகள் தலைமையகத்திற் பதிவாகின்றன. நாட் செல்லச் செல்ல இவ்வாறு பதிவானவற்றிலிருந்தே அவ்விடம் அமைந்த 5 பூத அணுக் கூறுகள் எம்மைச் செயல்பெறத் தூண்டுகிறது. நாம் கற்காத எவையும் எமது தலைமையகத்திலிருந்து சிந்தனைக்கு வரமாட்டாது. நாம் தலைமையகத்தில் என்னத்தை விதைத்தோமோ அவைகளே திரும்ப எம்மிடம் வந்து எம்மை வழி நடத்துகின்றன. எமக்கு கற்பிக்காத எந்தப் பாஷையும் தலைமையகத்தில் இல்லாததால் அவை எமக்கு விளங்க முடியாது. எந்தப் பாடத்தைப் படித்தோமோ அதுதான் திரும்ப வரமுடியும். நாம் முன் செய்த வினைப் பயனால் கொண்டுவந்த அணுக்கூறுகளுடன் இப் பிறப்பில் உழைக்கும் சேமிப்பையும் கூட்டிச் சேமிக்கிறோம். தலைமையக சேமிப்பில் இல்லாத எதையும் நாம் திரும்பப் பெறமுடியாது.



சிறுவயதில் பயிலும் தவறான கருத்துள்ள செயல்கள் தலைமையக 5 பூத அணுக் கூறில் அதற்குரிய அணுவாகப் பதிவாகிறது. நல்ல செயல்களாகப் பழகும் பழக்கங்கள் தலைமையக 5 பூத அணுக் கூறில் ஒளிப்பூத அணுக்களின் எண்ணிக்கையை சேமிப்பில் கூட்டுகின்றன. இவ்வாறு தலைமையகத்தில் சேமித்த அணுக்கூறுகளுக் கேற்பவே எமது எண்ணங்கள், செயல்கள் அமைகின்றன. இதை வெளியிலுள்ள எந்த சக்தியாலும் மாற்றியமைக்க முடியாது. இதையே அவரவர் செய்த வினை அவரவரையே சேருமென கூறியுள்ளார்கள். இவ்வாறு மேல் நிலைக்குரிய பூத அணுச் சேர்க்கையுள்ளவர்கள் தவிர்ந்த மற்றெவரும் செயல்படுத்த முடியாத வரலாறுகளை சமய வரலாறுகளாய் விளக்கியுள்ளார்கள். கீழ் நிலைக்குரிய அணுச் சேர்க்கையுள்ளவர்கள் புரிந்த கொடும் வரலாறுகளையும் விளக்கியுள்ளார்கள். கூடிய கீழ் நிலையில் செயல்பெற்ற ஒரு ஆத்மாவை அழித்து பிறப்பை மாற்றினாலன்றி அவனது செய்கையை எவ்விதமும் மாற்றி அமைக்க முடியாது என்பதையும் வரலாறுகளாக விளக்கியுள்ளார்கள். கொலை, களவு முதலான தன்னலமான எண்ணங்கள் அவனது தலைமையகத்தில் அதற்குரிய நீர்ப்பூத அணுக்களாக பதிவாகின்றது. அவ்வெண்ணத்துக்குரிய செயல்களில் இறங்கும் போது மேலும் மேலும் ஆசைக்குரிய நீர்ப்பூத அணுக்கள் சேருகின்றன, இவ்வாறு கூடுதலாக ஆசைப் பொருளைச் சேமித்துவிட்டால் இவ்வெண்ணத்தை மாற்ற முடியாது. பிறந்து பிறந்து உழன்றேயாக வேண்டும். தியாக உள்ளம் இரக்க சிந்தனைகள், கடும் உழைப்பு முதலிய தனது உடலைச் சிந்தியாதவாறு உருவாகும் எண்ணங்கள் அவனது தலைமையகத்தில் அதற்குரிய ஒளிப்பூத அணுக்களாய்ப் பதிவாகின்றன, இவ்வாறு கூடுதலாகச் சேமித்துவிட்டால் இவ் அணுச் செயல்களிலான சிந்தனை ஒளி உருவாகி ஒரு சில பிறப்புக்களில் பிறப்பற்ற ஒளிப்பூத அணுக்களாகச் செயல்பெற முடியும்.

**எம்மை ஆளாக்கிய தமிழ்மொழியின் அறநெறியை எம் ஆன்மா ஒளியில் சேரும்வரை நினைந்து நினைந்து கண்ணீர் உருகுவோம்.**

# தமிழ் கூறும் மூன்றெழுத்து

இயற்கை உலகைப் பெற்றெடுத்து இயக்கும் அன்னை 'சக்தி' மூன்றெழுத்து, அன்னை பெற்றெடுத்த 'உயிர்' என்ற மூன்றெழுத்தோடு 'உடல்' என்ற மூன்றெழுத்தில் உருவாகும் ஒரு குழந்தை 'அம்மா, அப்பா' என்று மழலை பேசுவதும் மூன்றெழுத்துத்தான். ஐந்து வயது வந்ததும் 'கல்வி' என்ற மூன்றெழுத்தைக் கற்று 'அறிவு' என்ற மூன்றெழுத்தில் தேர்ச்சி அடைகிறான்.

அவன் வாலிபப் பருவம் வந்ததும் 'இளமை' என்ற மூன்றெழுத்தில் 'திறமை' என்ற மூன்றெழுத்தைக் காட்ட 'தொழில்' என்ற மூன்றெழுத்தைத் தேடி 'பணம்' என்ற மூன்றெழுத்தை நாடி 'சுகம்' என்ற மூன்றெழுத்தை அடைகிறான். அவன் காளைப்பருவம் வந்ததும் 'காதல்' என்ற மூன்றெழுத்துக்கு உயிர் கொடுத்து உயிர் கொடுக்க 'மனைவி' என்ற மூன்றெழுத்தை வாழ்க்கைத் துணையாக அடைந்து 'சுகம்' என்ற மூன்றெழுத்தில் அனுபவித்துவிடுகிறான். பின் 'பிள்ளை' என்ற மூன்றெழுத்துக்கும் 'அம்மா, அப்பா' என்ற மூன்றெழுத்துக்கும் அதிபதியாகின்றான்.

அதன்பின் 'காலம்' என்ற மூன்றெழுத்து 'வயது' என்ற மூன்றெழுத்தை அதிகரித்து 'முதுமை' என்ற மூன்றெழுத்தில் முக்தி அடைந்து முடிவில் 'உயிர்' என்ற மூன்றெழுத்து 'உடல்' என்ற மூன்றெழுத்தை விட்டுப் பிரிந்து 'பிணம்' என்ற மூன்றெழுத்தாகிவிடுகிறது.

இதனிடையே மனித உள்ளங்களில் தோன்றி மறையும் பற்பல எண்ணங்கள் அதாவது — அன்பு, அறம், பண்பு, பாசம், பொறுமை பொறாமை, வீரம், கனவு என்று இன்னும் எத்தனையோ மூன்றெழுத்து எண்ணங்களைத்தான் 'அறம்', 'பொருள்', 'ஞானம்' என்ற முப்பாலாகப் பிரித்து உலகிற்கே வழிகாட்டியாக இருக்கும் 'தமிழ்' என்ற மூன்றெழுத்தில் 'குறள்' என்ற மூன்றெழுத்து நூலைத்தான் நமக்கெல்லாம் தந்திருக்கிறான் வான்புகழ் ஈந்த வள்ளுவன்.

தொகுப்பு: என் எஸ். செல்வரத்தினம்
தொல்புரம்



# சிந்திப்போம் - செயல்பெறுவோம் - பலனடைவோம்

ஐந்து பூத அணுச் சேர்மானங்களை மக்களுக்கு புரியவைப்பதற்காக சில விளக்கங்களை எமது சிந்தனை மூலம் தெரிவதை தெரியப்படுத்துகிறோம். முதலாவதாக வானொலிப் பெட்டியை எடுத்துக் கொண்டால் 7000 மைல்களுக்கப்பால் இருந்து ஒலி பரப்பப்பெறும் செய்திகளோ, பாடல்களோ எமது வீட்டில் இருந்தபடியே எமது வானொலிப் பெட்டியை ஒலிபரப்பப் பெறும் நிலைய அலைவரிசையில் விடும்போது அச் செய்தியையோ பாடல்களையோ நாம் தெளிவாகக் கேட்கமுடிகின்றது. இவை தற்போதைய விஞ்ஞான உலகக் கண்டுபிடிப்பாகும். இந்தக் கண்டுபிடிப்பிற்கு உதவியது கம்பிச் சுருள்களும் மற்றும் ஐந்துபூதச் சேர்க்கையிலான மின் கடத்திகளும், இன்னோரன்ன பிற பொருட்களுமாகும்.

இதே போன்றுதான் சிறு வயதில் இருந்து கற்கும் கல்வியோ, அனுபவமோ எமது (சூக்கும தேகம்) தலைமையகத்தில் பதிவடைகின்றது. பதிவாகாத விசயங்கள் எதுவும் எமது நினைவுக்கு வரமாட்டாது. பதிவடையும் விடயங்கள் தான் எமது எண்ணத்தில் தோன்றி எம்மைச் செயற்படுத்துகின்றது. நாம் நினைக்கும் எண்ணங்களுக்கேற்ப ஐந்துபூத விகிதாசாரம் அமைந்து எம்மை வழிநடத்திச் செல்கின்றன. இவ் எண்ணங்களில் ஒளிப்பூதம் சேரும்போது எமது செயல், சிந்தனை தூய்மையடைந்து நல்லதைச் செய்யத் தூண்டுகின்றது. இவ்வாறே எமது எண்ணங்களில் சுகவாழ்வு எண்ணங்கள் ஏற்படும்போது அவ்வெண்ணத்துக்குரிய (ஆசை) நீர்ப் பூதம் சேர்ந்து அதன் பயனால் எமது செயல், சிந்தனை தீய எண்ணங்களாக செயல்பெறுகிறது. எமது (சூக்கும) தலைமையகத்தில் பதிவு நடைபெறுவது போலவே வானொலி நிலையத்தில் இருந்து ஒலிபரப்பப் பெறும் செயலும் நடைபெறுவதை நாம் நன்கு உணரமுடிகின்றது. நமது செயலின் பதிவுகள் எம் எண்ணத்தை செயற்படுத்துவது போலவே நிலையத்தின் ஐந்து பூத அணுவிற்கேற்ப அந்தந்த மொழியாகி அலைவரிசையில் செயல் பெறுவதை நாம் உற்றுணர முடிகின்றது.

இதே போல நூற்றி எட்டு அண்டங்களையும் ஆட்சி செய்து கொடூர வழி நடந்து அதன் செயற்பாட்டால் ஐந்து பூத விகிதாசார மாற்றம் ஏற்பட்டு கீழ் நிலையை அடைந்த சூரபதுமனது வரலாற்றைப் பார்ப்போம். காசிப முனிவருக்கும் மாயை என்பவளுக்கும் பிறந்தவன் தான் சூரபதுமன். சூரனை காசிபரோ அறத்தின் வழி நடாத்தி நல்வாழ்வு வாழ்விக்க விரும்பினார் இதை விரும்பாத தாயோ அசுர குருவான சுக்கராச்சாரியாரிடம் ஒப்படைத்து அவனுக்கு கல்வி புகட்ட விரும்பினார். சூரன் சுக்கராச்சாரியார் உபதேசப்படி நடந்து சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்து அழிக்க முடியாத பெரு வரத்தைப் பெற்றான். ஒருவனுக்கு அளவுக்கு மீறிய பணமும் வசதிகளும் இருந்தால் அவனது மனநிலையிலுள்ள ஆணவம், அதிகார ஆசைகள் கூடி உடல் உழைப்பில்லாத சுகவாழ்வை வாழ விரும்புவது இயல்பே. இதேபோல சூரனின் மனநிலையும் தனது வலிமை கூடியதும் ஆசை பெருகி அளவிற்கு மீறிய அதிகாரத்தை பிரயோகிக்க விரும்பினான். இதனால் அவனது ஐந்து பூத விகிதாசாரம் மாற்றமடைந்து ஒளிப்பூதம் குறைந்து ஆசைக்குரிய நீர்ப்பூதம் கூடி அவனது மனதை தீயவழியில் செல்லத் தூண்டியது.

இவனது நியாயமற்ற அடக்குமுறை பொறுக்காது தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். சிவபெருமான் தனது தூதுவர் மூலம் இவனைத் திருந்துமாறு மன்றாடிக் கேட்டார். அவனது நீர்ப் பூதம் கூடிய ஐந்து பூத விகிதாசார சேர்மானத்தால் அவனது எண்ணம் உண்மை வழி நாட மறுத்தது. அவனது (சூக்கும தேகம்) தலைமைப் பீடத்திலுள்ள அணுவுக் கேற்பவே இவன் கற்ற பாடங்களின் பதிவுகள், இவன் செயற்பாடுகள், சிந்தனைகள் நடைபெறுவதினால் உண்மையை உணர அவனது ஆசைப் பொருளுக்குரிய நீரணுவின் கூடுதல் தன்மை இடமளிக்கவில்லை. இதனால் இவனது ஆசை அதிகரித்து நீர்ப்பூத விகிதாசாரம் மேலோங்கி இருந்தது

இதனால் உண்மைப் பொருளான சிவனால் அழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய சுடர் மூலம் ஞானப் பொருளை உருவாக்கி ஞானப் பொருளின் மூலம் சூரனது அகங்காரத்தை இரு கூறாக்கி சேவலும் மயிலுமாக்கினார் என கூறப்பெற்றுள்ளது. இவனது ஐந்துபூத விகிதாசார மாற்றத்தினால் கீழ் நிலைக்கு தள்ளப்பெற்ற இவனது உடலில் ஆறறிவு



படைத்த மனிதனுக்குரிய அணுக்கூறுக்கு குறைவாய் இருந்தமையினாலேயே நான்கறிவு படைத்த சேவலும் மயிலுமான பறவையினமாகப் பிறக்கவேண்டி ஏற்பட்டது. இவ்வாறே எமது எண்ணங்களின் செயற்பாட்டால் ஐந்து பூத விகிதாசாரம் கீழ் நிலையை அடைந்த சூரபதுமனைப் பார்த்தோம்.

இதைத் தொடர்ந்து ஐந்து பூத விகிதாசார மாற்றத்தால் மேல் நிலையை அடைந்து பிறப்பை நீக்கிய மாணிக்கவாசகரைப் பற்றிப் பார்ப்போம். மாணிக்கவாசகர் மந்திரிப் பதவியை வகித்து அரசனுக்கு குதிரை வாங்கப்போன வரலாற்றைப் பார்ப்போம். மந்திரிப் பதவி வகிப்பவர் என்றால் அவர் படிப்பறிவில் மிகவும் கூடியவராகவே இருப்பார். பதவிக்குரிய கடமைகளையும் நன்கு அறிந்திருப்பார். இவர் மூலம் குதிரைகளை வாங்க விரும்பிய அரசன் குதிரைகளுக்குரிய பணத்தைக் கொடுத்து அனுப்புகின்றார். இவர் பணத்தையும் கொண்டு குதிரை வாங்குவதற்கு வேற்றூர் செல்கின்றார். செல்லும் வழியில் அன்னசத்திரத்தில் அன்னதானம் நடப்பதைக் கண்டார். கண்டதுதான் தாமதம், அவர் கொண்டுவந்ததும் இதுகால வரை அடைந்த அணுக்கூறுகளுக்கேற்பவும் அவர் மன நிலையில் அந்நிகழ்ச்சியைத் தவிர வேறெதுவும் அவருக்குத் தெரியவில்லை. தன்னிடம் உள்ள பணம் முழுவதையும் அன்னதானத்தில் செலவழிக்கின்றார். அந்தச் சேவை மூலம் மனம் மகிழ்வு கொள்கின்றார். இது அரசனுடைய பணமே, இதை எமக்கு குதிரை வாங்கத் தந்தவர் அல்லவா என்று எள்ளளவும் அவர் மனம் கவலை கொள்ளவில்லை. கவலை கொள்ள அவரது தலைமைப்பீட ஐந்து பூத விகிதாசாரம் இடமளிக்கவில்லை.

பின்னர் அரசனால் அழைத்துச் செல்லப்பெற்று இவரது நடவடிக்கைக்கு தண்டமாக கல்லை நெற்றியில் வைத்து உச்சி வேளையில் சூரியனைப் பார்க்கப் பணிக்கப்படுகின்றார். அவர் அரசன் இட்ட தண்டனையை மீறவில்லை. தான் செய்ததற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றார். அவர் சுகவாழ்வை விரும்பவில்லை. உடல் உழைப்பின் மூலம் அவருக்கு இட்ட தண்டனையை அனுபவித்ததின் மூலம் அவரது தலைமைப்பீடத்தில் உள்ள ஐந்து பூத விகிதாசார ஒளிப் பூதம் கூடி பிறப்பை நீக்கும் உயர் நிலையை அடைகின்றார்.

ஒருவன் கொண்டுள்ள எண்ணத்தை வெளியிலுள்ள எந்த சக்தியாலும் மாற்றியமைக்க முடியாது. அவனது சிந்தனை — உடலுழைப்பு மூலம்தான் அவனது அணுக்கூறுகளை மாற்றியமைத்து எண்ணத்தை மாற்றியமைக்க முடியும். எனவே நல்வாழ்வை எண்ணுவோம். நல்லதையே செய்வோம், இதன் பயனாக (சூக்கும தேகம்) தலைமையகத்தில் பதிவான ஐந்துபூத ஒளி அணு எண்ணிக்கை உயர்வடைந்து எமது பிறப்பை நீக்கி ஞான ஒளியில் கலப்போமாக.

# பாராட்டுக் கடிதங்கள்

மதிப்பிற்குரிய விநாயகர் தருமநிதிய நிர்வாகி அவர்கட்கு,

அன்பு வணக்கங்கள் பல,

ஒரு இக்கட்டான சூழ்நிலையில் எழுதப்பட்ட கடிதத்தில் தற்செயலாக நிகழ்ந்த தவறைச் சுட்டிக்காட்டிய தங்கள் அறிவுறுத்தலுக்கு நன்றி தெரிவிக்க வார்த்தைகள் போதாது. தங்கள் பணி எம் சமுதாயத்தை எவ்வளவு சிந்திக்கவைத்துள்ளது என்பது சமூகத்துடன் உறவாடும் என்போன்றவர்கட்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. தொடர்ந்து தங்கள் வெளியீடுகளை வாசிக்க ஆர்வமாயுள்ளோம்.

குறிப்பாக, மாத வெளியீடான 'அறத்தமிழ் ஞானம்' போன்ற நூல்கள். அத்துடன் இயற்கை வைத்தியத்திற்குரிய 'நூற்றி அறுபது குறிப்புகள்' என்ற நூலும் அனுப்புமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்,

'வல்லிபுர வாசா'.
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி. 27-8-92

நன்றியுடன்,
வ- பரமேஸ்வரி

தமிழ் ஈழத்தில் எங்கள் சமுதாயம் சிர்பெற தங்களின் வெளியீடுகள் தருமசாதனமாக விளங்குவது போற்றுதற்குரியது. நாங்கள் அனைவரும் ஐயாவின் தருமப்பணிக்கு தோளோடு தோளாக நின்று உதவ முன்வருவது மிக அவசியமெனக் கருதுகின்றேன். எமது சமயத்தின் உண்மை நிலைமையை மக்களுக்கு மிகத் தெளிவாக விளங்கும் வகையில் இந்த அனர்த்தம் நடைபெறும் இக்கட்டான காலகட்டத்திலும் கூட மேம்படுத்த எடுக்கும் முயற்சியான தங்கள் வெளியீடுகள் மிக மிகப் பாராட்டப்படக் கூடியவை.

இயற்கை வைத்தியம்-சித்தவைத்தியம் இருப்பது இன்னொரு தெய்விகச் சிறப்பம்சமாகும். விநாயகர் தருமநிதியத்தின் பணிகள் மேன்மேலும் வளரவும், நிறுவனர் ஐயா பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி சிறப்புடன் வாழ்ந்து தமிழ் இனத்துக்குச் சேவையாற்ற இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

சி. சிவசுப்பிரமணியம்,
செயலாளர்,
கைதடி நுணாவில் ச. ச. நிலையம்,
சாவகச்சேரி.

27-7-92

இந்துவிநாயகர் நூல் நிலையம்

## பாராட்டுக் கடிதங்கள் தொடர்:

கனம் நிறுவனர் அவர்கட்கு,
விநாயகர் தரும நிதியம்

ஐயா,

தங்கள் வெளியீடுகளை இலவசமாக எங்கள் மன்றத்துக்கு தாங்கள் அனுப்பிவருவதையிட்டு தங்கள் நிறுவனத்திற்கு முதல் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றைய காலகட்டத்திலே தங்கள் நிறுவனத்தினர் அறிவுக் களஞ்சியங்களை வெளியிட்டு இவ்வாறு இலவசமாக விநியோகித்து வருவதை பாராட்டுவதற்கு சொற்கள் அறியாது தடுமாறுகின்றேன்.

தங்கள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த சிறந்த பணியை பாடசாலைகள் பல புரிந்துகொள்ளாதது மிகவும் வேதனைக்குரியதாகவே உள்ளது. இன்றைய மாணவ சமுதாயத்தை உற்றுநோக்கும்போது அறநெறிச் சிந்தனைகள் குறைந்த ஒரு சமுதாயமாகவே வளர்ந்து வருவதுபோல் தெரிகின்றது. இந்த நிலையை மாற்ற முயற்சிக்கவேண்டியது ஆசிரிய உலகத்தின் தலையாய கடனாகும்.

தங்கள் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள **அறம்வளர் இளந் தமிழ்** சஞ்சிகை உண்மையிலேயே சிறுவர்களுக்கு ஓர் பெரும் வரப்பிரசாதமாகும். முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே சிறுவர்களின் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கக் கூடிய பல சஞ்சிகைகள் இருப்பதை நாம் காண்கின்றோம். ஆனால் நம் சிறுவர்கள் அவ்வாறான சஞ்சிகைகளை மனத்தால் கூட எண்ணிப்பார்க்க முடியாதவர்களாக இருக்கும்போது, பல சிறந்த விடயங்களை தன்னகத்தே கொண்டு வெளிவருகின்ற **"அறம் வளர் இளந்தமிழ்"** சஞ்சிகை, அவர்களுக்கு நிச்சயம் பயன்படும் என்பதில் ஐயமே இல்லை.

நம்மில் அநேகர் நமது கோவில்களில் எல்லாம் புதிய அமைப்புகளை ஏற்படுத்துவதற்கும், பலவித விழாக்களை எடுப்பதற்கும் பல்லாயிரக் கணக்கில் பணத்தைச் செலவு செய்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் நாளைய சமுதாயமாகிய இன்றைய சிறுவர்களின் உள்ளங்களில் அறநெறிகளை வளர்ப்பதற்கு தங்கள் நிறுவனத்தைத் தவிர வேறு எவராவது இவ்வாறு முயற்சிகளை மேற்கொள்வதை நாம் காணக்கூடியதாக இல்லை. இந்த அரும்பெரும் பணியை ஆற்ற முன்வந்திருக்கும் தங்கள் நிறுவனம் என்றும் நீடூழி வாழ எல்லாம்வல்ல இறைவனை நம் நாட்டின் சிறுவர்கள் சார்பில் வேண்டுகின்றேன்.

கந்தசாமி கோவிலடி,
கோப்பாய் வடக்கு.
19-9-92

செல்வன் த. தவதாஸ்,
தலைவர்
இந்து இளைஞர் மன்றம்

## அறத்தமிழ் ஞானம் எண்ணங்கள்

தமிழன் மீட்சி பெற வேண்டுமாயின் காலத்துக்கு ஒவ்வாத கோட்பாடுகள் வேண்டாத பழக்க வழக்கங்கள் காரணமற்ற சாதி, மத வேறுபாடுகள் இவற்றைக் களைந்து காலத்தோடு ஒத்த கோட்பாடுகளை பின்பற்றி இன ஒற்றுமையை வளர்த்து முற்போக்கு வாதியாய் வாழ்ந்திடல் வேண்டும். இம்மாற்றத்தை செயற்படுத்தும் கடமை ஈழத்தமிழ் இளைஞருடையது.

பசி, பஞ்சம், வறுமை, நோய் முதலியவற்றால் தாக்குண்டு அல்லலுறும் ஏழைகள் பார் எங்கணும் உள்ளனர். இவர்களது இடுக்கண் களைந்திட நன்முயற்சி செய்வார் யாருமில்லை. மாறாக ஆடம்பர வாழ்க்கையிலும் விண்வெளிச் சுற்றுலாவிலும் பெரும் பணம் விரயமாக்கப்படுகிறது. பணத்திற் திளைக்கும் சில தமிழர்கள் தமிழ்உணர்ச்சியின்றி தமிழர் என்ற தனித்துவமின்றி பகட்டு வாழ்க்கை நடாத்துகின்றனர். அல்லலுறும் சகதமிழர் நிலைபற்றி இவர்கள் எத்துணையும் சிந்திப்பதில்லை. எமது பொருளாதாரத்தை மேம்படுத்த இவர்கள் முன்வருவதே இல்லை. இவர்களது பணம் நமது பிரதேசங்களில் தொழிற்சாலைகளை உருவாக்கி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க உதவுவதாயமைந்தால் எம் நாடு முன்னேற்றம் அடைந்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் அமையுமென்பது முற்றிலும் சரியானதே.

தன்மொழி மீதும், மண் மீதும் ஒருவன் பற்றுக்கொள்வது என்பது சகசமாகும். எம் எதிர்காலம், மொழியின் எதிர்காலம், கலாச்சாரத்தின் எதிர்காலம் இவைகளையிட்டு தமிழ்மக்கள் இனியாவது சற்று நிதானமாக பொறுப்புணர்ச்சியுடன் சிந்தித்தால் விடைகாணமுடியும். சுயநலம் காரணமாக சமூக ஏற்றத் தாழ்வுகள் வேறு, சமய ஏற்றத் தாழ்வுகள் வேறு என இயம்பி தப்பித்துக் கொள்ள முயலுகிறார்கள். தன் சுகத்தை மாத்திரம் நாடுபவர்கள் சமூக சேவையில் ஈடுபடுவது அர்த்தமற்றது.



## உங்கள் சிந்தனைக்கு ....

★ விதவைகளின் சோகக் கண்ணீரைத் துடைக்கவும் அநாதையின் வாய்க்கு ஒருபிடிசோறு கொண்டுவந்து கொடுக்கவும் இயலாத ஒரு சமயத்திடமோ, தெய்வத்திடமோ எனக்கு நம்பிக்கையில்லை.

சுவாமி விவேகானந்தர்

★ தொற்று நோய்களை விரட்டியடிக்கும் சக்தி வேப்ப இலைகளுக்கும், வேப்பமரக்காற்றுக்கும் உண்டு. ஆகவே வீட்டிற்கு முன் புறமாகவோ அல்லது பின் புறத்திலோ வேப்பமரத்தை வளர்ப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது வேம்பின் இலை, காய், பூ, பழம், பட்டை, வேர் போன்ற எல்லாப் பாகங்களும் மருந்தாகப் பயன்படுகின்றன. ஆகவே வீட்டுக்கு ஒரு வேப்பமரம் வளர்ப்போம்.

★ உடம்பு ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் நாம் வயிற்றைக் கவனிக்க வேண்டும். வயிற்றின் ஒரு பகுதியை உணவுக்காகவும் இன்னொரு பகுதியை தண்ணீருக்காகவும் மூன்றாவது பகுதியை 'காற்றுக்காகவும் ஒதுக்குங்கள். வயிறுமுழுவதும் நிரம்பும்படி 'உணவை மட்டும் இட்டு நிரப்பாதீர்கள். இது பல கோளாறுகளை உண்டாக்கும்.

★ தினசரி உணவில் வெங்காயம் சேர்த்துக் கொள்ளுங்கள். இது 'இரத்தக் குழாய்களில் இரத்தம் உறைவதை தடுக்கிறது. இதனால் இருதயத் தாக்கம் தடுக்கப்படுகின்றது. சின்ன மருந்துகளால் பெரிய ஆபத்துக்களையும் வெற்றி காணலாம்.

★ விக்கல் எடுக்கும் சமயங்களில் சுக்குப் பொடியைத் தேனில் குழப்பி நாக்கில் தடவிச் சப்பிக் கொண்டிருந்தால் விக்கல் நின்றுவிடும். விக்கலை நிறுத்த எத்தனையோ வழிகளைச் சொல்லுகிறார்கள் அவற்றுள் இதுவும் ஒன்று.

தொகுப்பு:- கே. பி. ராஜா

# கேள்வி ? பதில் !

க. மாணிக்கவாசகர்,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

**கேள்வி:** மானிடராகப் பிறந்தவர்கள் செய்யவேண்டிய கடமைகளுள் தென்புலத்தார் கடமையை முதன்மைப் படுத்தியதேன்?

**பதில்:** எந்தவொரு ஆன்மாவுக்கும் பிறர் செய்த நன்றியை உணர்ந்து தன்னலம் கருதாது தன்னை ஆளாக்கிய இறந்தவர்களுக்குச் செய்யும் பணிகள் செய்பவரது தலைமையக ஐந்து பூத அணுக்களில் பல ஒளி அணுக்களைக் கூட்டுகின்றன. இவ்வாறே இறந்தவரும் தனது பிதா மாதாவிற்கு சுயநலமற்ற பணியை இறக்க முன்னரே செய்திருந்தால் அவரது தலைமையக ஐந்துபூத அணுக்களில் பல ஒளி அணுக்களைக் கூட்டியிருக்கும். இவ்வாறு அமைந்த அவரது சேமிப்பிலுள்ள பூத அணுக்களையே அவர் கொண்டு சென்றிருக்கிறார். அப் பூத அணுக் கணக்குகளுக்கு அமையவே அவர் செல்லும் பிறப்பிடம் அமைகிறது. எவருமே தன்னலமின்றிச் செய்யும் இரக்க சிந்தனைச் செயல்கள் அவரவர்களின் தலைமையக ஐந்து பூத அணுக்களில் மேல்நிலைக்குரிய ஒளி அணுக்களை கூட்டவே செய்யும். பகட்டுக்காகவும், பேருக்காகவும், பதவிக்காகவும் செய்யும் கிரியைகளோ, பணிகளோ அவரவரது ஐந்துபூத அணுக்களின் ஆசைக்குரிய நீர் அணுக்களை கூட்டவே செய்யும். பிறரிடம் கையேந்தாத யப்பானியரின் செயற்பாடுகளை ஆராய்ந்தால் இலகுவில் விடை காணலாம். இதை மணிவாசகர் 'சென்று சென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து ஒன்றாகும் சிவனே' என்கிறார். கூடிய விளக்கம் பெற விரும்பின் நேரில் வந்து பெறலாம்.

நீங்கள் அனுப்பும் அறநெறிக் கேள்விகளுக்கு விநாயகர் தரும நிதிய நிறுவனர் அனுபவரீதியாக பதில்களைத் தரக் காத்திருக்கின்றார்.
கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

நிறுவனர்
**கேள்வி / பதில்**
விநாயகர் தரும நிதியம்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

முடிவு விலை:
ரூ. 15-00
பிரதி: 1200

# EXERCISE BOOK

SUBJECT

NAME

GRADE

Pgs 80

A-5 148 X 210 m.m.

Price 7 50

Manufactured From Cream Wove of

# எமது வெளியீடுகளை பின்வரும் விலாசங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

| | |
|---|---|
| கலைச்சோலை | வல்வெட்டித்துறை |
| அன்னை மருந்தக மருந்துச்சாலை | பருத்தித்துறை |
| அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவனம் | கண்டிறோட், கைதடி |
| அபிராமி மருந்தகம் | நீர்வேலி |
| பூபாலசிங்கம் புத்தகசாலை | யாழ்ப்பாணம் |
| பாசையூர் மக்கள் முன்னேற்றச் சங்கம் | யாழ்ப்பாணம் |
| சின்னையா ஸ்ரோஸ் | கொடிகாமம் |
| எஸ். கே. சாமி அன் கோ. | நெல்லியடி |
| சிவன் மருந்தகம் | சாவகச்சேரி |
| முத்தமிழ் மன்ற நூலகம் | சுன்னாகம் |
| சூரியா பார்மசி | புத்தூர் |
| ரி. வி. பாலா | இணுவில் |

*

இந் நூலினை புலோலி மேற்கு பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினருக்காக நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.